விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 32 புதன்கிழமை (15.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 178

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சிங்கள மக்களுக்கு இணையாக

# தமிழர்களுக்கு அரசியல் தீர்வு

## இந்திய பிரதமரிடம் ஜெயா வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை அரசு மீது இந்தியா பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் முதல்வர் ஜெயலலிதா நேரில் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் சிங்கள மக்களுக்கு இணையாக தமிழ் மக்களுக்கும் அரசியல் தீர்வு வழங்கப்படல் வேண்டும் எனவும் அவர் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)




## வட. கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறுப்பு நாடாளுமன்றத்திடம்!

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பொறுப்பினை நாடாளுமன்றத்திடம் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக சர்வ கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறு சபாநாயகரிடம் ஜனாதிபதி இந்த வாரத்தில் கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளார் என அரசாங்க தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வ கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமித்து அதனூடாக வடக்குக் கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## எத்தனை சிறைகளில் அடைத்தாலும் இலட்சியப் பயணம் தொடரும்! பொன்சேகா அறைகூவல்



(கொழும்பு)

நூறு சிறைச்சாலைகளில் தம்மை அடைத்தாலும் பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்காக இரத்தத்தையும் வியர்வையையும் சிந்திய தான் தொடர்ந்தும் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் அரசியலை இல்லா (20ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் வழங்கத் தவறியதால் வழக்கு

(கொழும்பு)

முன்னாள் வெளிநாட்டமைச்சர் லஷ்மன் கதிர்காமரை கொலைசெய்வதற்கான சதியை பொலிஸாருக்கு வேண்டும் என்றே தெரிவிக்கத் தவறிய மேல்மாகாண மக்கள் முன்னணியின் நிர்வாக செயலாளர் மீது சட்டமா அதிபர் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நடராசா சிவராசா அல்லது அம்பலவன் என்பவரை கொழும்பு மேல் நீதிமன்றில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் குற்றவாளியாக நிறுத்தியுள்ளார்.

பாஸ்கரன் என்று அழைக்கப்படும் ஒருவர் அப்போதைய வெளிநாட்டு அமைச்சரான லஷ்மன் கதிர்காமரை கொலை செய்யும் நோக்கில் வேலைக்கமர்த்துவதற்குப் பொருத்தமான ஒரு நபரை 2005, ஜனவரி 5 - டிசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் தேடிக்கொண்டிருந்தார் என்பதை நன்கு அறிந்திருந்தும் அதைப் பொலிஸாருக்கு அறிவிக்கவில்லை என நடராசா சிவராசா மீது நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்த தகவலை வேண்டும் என்றே பொலிஸாரிடமிருந்து மறைந்தமை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியது என சட்டமா அதிபர் கூறினார்.(ஏ-1)

## முன்னாள் போராளிகளை விசாரிக்க நெதர்லாந்துக் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

முன்னாள் போராளிகளுக்கும் நெதர்லாந்திலுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராய்வதற்காக நெதர்லாந்தின் விசேட குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழு தமது நாட்டில் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கும் இலங்கையில் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்பு குறித்து ஆராயவுள்ளது.

குறிப்பாக கடந்த 1993ஆம் ஆண்டு முதல் 2009 ஆண்டு வரையிலான விடுதலைப்புலிகளின் நிதி சேகரிப்புக் குறித்து இந்தக் குழு விசாரணை நடத்தவுள்ளது.

இதற்கிடையில் தற்போது தடுப்புக் காவலில் உள்ளதாகக் (20ஆம் பக்கம் பார்க்க)

## 24 இலங்கைத் தமிழர் இந்தியாவில் கைது

(சென்னை)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 24 இலங்கை அகதிகள், இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகத்தின் இரண்டு அகதி முகாம்களில் தங்கியிருந்த இலங்கையர்களே இவ்வாறு அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டுள்ளனர்.

விருத்தாசலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்கள் 24 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் முரண்பட வேண்டாம் அரசுக்கு ஐ.தே.கட்சி ஆலோசனை

(கொழும்பு)

இந்தியாவுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. சர்வதேச சமூகத்துடனான பிரச்சினைகளுக்கு இராஜதந்திர வழிமுறைகளில் தீர்வு காணப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

இந்திய அரசாங்கத்துடன் ஏதேனும் கருத்து முரண்பாடுகள் காணப்பட்டால் அவற்றைப் பேச்சுவார்த்தைகள் மூலம் (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் நேற்று எலும்புக் கூடுகள் மீட்பு

(மன்னார்)

மன்னார் தோட்டவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள புனித வேதசாட்சிகளின் ஆலய வளாகத்தில் தியான மண்டபம் ஒன்று கட்டுவதற்கு நேற்று செவ்வாய்கிழமை மதியம் கிடங்கு வெட்டியபோது எலும்புக் கூடுகள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மறை மாவட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில்,

1544 ஆம் ஆண்டு (19ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பாடமுகாம்

யாழ்.கல்விவலயப் பாடசாலைகளிலிருந்து இவ்வாண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் ஆகியவற்றுக்கான பாடமுகாம் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 24 திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் சித்திரம், நடனம் ஆகிய பாடத்திற்கான பாடமுகாம் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும், சங்கீத பாடத்திற்கான பாட முகாம் யா/ செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், நாடகமும் அரங்கியலும் பாடமுகாம் யா/மத்திய கல்லூரியிலும் நடத்தப்படவுள்ளது. எனவே மேற்படி பாடத்துடன் தொடர்புடைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# மரக்காலைகளில் பனை மரம் விற்பனை செய்வதற்குத் தடை

(யாழ்ப்பாணம்)

மரக்காலைகளில் பனைமரம் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பனை வளத்தை பேணும் முகமாக பனை அபிவிருத்தி சபையானது பனை தறித்தலை பிரதேச செயலகங்களுடன் இணைத்து கட்டுப்படுத்தி வருகிறது.

இதன் பிரகாரம் அத்தியாவசிய தேவைகளான வீட்டு நிர்மாணத்திற்காக மட்டும் குறிப்பிட்ட அளவான பனைகள் தறிப்பதற்கு பனை அபிவிருத்தி சபை அனுமதி வழங்கி வருகிறது.

ஆனால் இதற்கு மேலதிகமான மரக்காலைகளில் எவ்வித அனுமதியுமின்றி பனை மரங்கள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அனுமதியின்றி பனை மரங்கள் தறிக்கப்படுவதும் விற்பனை செய்யப்படுவதும் 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ள மரங்களை தறித்தல் கட்டுப்பாட்டு திருத்தச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனவே இனிவரும் காலங்களில் அனுமதி பெறப்படாத பனை மரங்கள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டால் அம் மரக்காலைகளில் மேல் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என்று பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார். (எ)

# பேராசிரியர் துரைராசா நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தேசியக்கல்வியற்கல்லூரியில் பேராசிரியர் துரைராசா ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளை வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இந்திய காரைக்குடி அழகப்பர் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும், அடிகளார் பெண்கள் கல்வியியற் கல்லூரிபணிப்பாளருமானபேராசிரியர்எஸ்.மோகன் ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாடு எனும் பொருளில் பேருரையை நிகழ்த்துவார்.

அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள்பீடபீடாதிபதிபேராசிரியர்எஸ்.சத்தியசீலன்ஆற்றுவார்மேற்படி நிகழ்வில்ஆர்வலர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு கல்லூரி பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## நூல் வெளியீடு

பண்டிதர் க.வீரகத்தி அவர்கள் எழுதிய பிற்கால இலக்கண மாற்றங்கள் நூல் வெளியீட்டுவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில்இடம்பெறும். இந்நிகழ்வில் அறிமுக உரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் வெளியீட்டு உரையை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரனும் விமர்சன உரையை விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனும் ஏற்புரையை நூலின் பதிப்பாசிரியரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளருமான மு.கௌரிகாந்தனும் நிகழ்த்துவர். (நு)



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் முதன்முறையாக விழிவெண் படலம் (கற்றாக்) சத்திர சிகிச்சை முகாம் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், ஒரு பகுதியினர் சத்திரசிகிச்சைக்கு தயார் நிலையில் அமர்ந்திருப்பதையும், சத்திர சிகிச்சைக்கு முன் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுத் தலைவருமாகிய சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நோயாளர் ஒருவருடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : என்.குமார்)

# லங்கா சீமென்ற் நிறுவன பணியாளர்களுக்கு பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவனத்தில் பணியாற்றியோருக்கான பணிக்கொடை வழங்கல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வீரசிங்கம் கட்டிடத்தில் முதல் மாடியில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்படவுள்ளது.

இப் பணிக் கொடையினை பெறவுள்ள லங்கா சீமெந்து நிறுவனப் பணியாளர்களை மதியம் ஒரு மணியளவில் வீரசிங்கம் கட்டிடத்தின் 4 மாடியில் அமைந்துள்ள மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழல் பிரதியினையும் 50 ரூபாய் பெறுமதியான முத்திரையொன்றையும் கொண்டுவருமாறு யாழ்.உதவித் தொழில் ஆணையாளர் திருமதி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

காசோலையை பெற்றுக்கொள்ளவுள்ள பணியாளார்களின் விபரம் வருமாறு,

எம்.தேவகுமார், எஸ்.சிறிநாதன், ரி.தியாகலிங்கம், எஸ்.லோகநாதன், எ.தவராஜா, எஸ்.தேவலோகேஸ்வரன், எஸ்.சிவராஜகுமார், எஸ்.நித்தியானந்தன், ஏ.செல்வானந்தம், ரி.தயானந்தன், எம்.ஜோன்பற்றிக், ஜீ.அன்ரன் மகேஷன், என்.சண்முகரத்தினம், பி.எஸ்.விஜயகுமார், கே.குகதாசன், எஸ்.யோகேஸ்வரன் ரி.பரராஜசிங்கம், எல்.வரதபவன், கே.அருள் சோதி, டபிள்யு.விக்னேஸ்வர ராஜா, ஏ.பவளநாதன், ரி.குணசேகரம், கே.வைரவநாதன், கே.சிவராஜா, எம்.செல்வரட்னம், ரி.கணேசமூர்த்தி, எஸ்.வேலுசாமி, எஸ்.நாகேஸ்வரன் கே.திருக்குமரன், எம்.பி.குணரட்னம், ரீ.வரதராஜன், எஸ்.பாலசிங்கம்,

ஆர்.ராஜகுமார், வி.சபானந்தன், எம்.ஞானேந்திரன், கே.தவராஜா, ரி.வசந்தராசா, எஸ்.கமல், கே.சிவலோகநாதன், எம்.புவனேஸ்வரன், ரி.வேல்முருகன், ஆர்.நாகராஜா, கே.மகாதேவன், கே.மனோகரன் கே.நவரட்ணம், ரி.தயாளகுமார், ரி.யோகேஸ்வரன், ஜே.ரட்ணபோஸ், பி.செல்வநாயகம், எம்.கணேசலிங் கம், வி.அருளானந்தம், பி.வரதராஜா, என்.ராஜலிங்கம், எஸ்.தேவகுணாளன், எஸ்.வாமதேவன், என்.சந்திரசேகரம், எஸ்.பஞ்சலிங்கம். (எ)

# பொது நலவாயப் போட்டிகளுக்காக ரூ. 43 ஆயிரம் கோடி செலவாகும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை நகரில் 2018ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்த அனுமதி கிடைத்தால் 400 கோடி அமெரிக்க டொலர்களை (சுமார் 43 ஆயிரத்து 750 கோடி இலங்கை ரூபாய்) அம்பாந்தோட்டை பிராந்திய அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கம் செலவிடும் என மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் கூறியுள்ளார்.

இலங்கையின் அம்பாந்தோட்டை மற்றும் அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரம் ஆகியன இவ் விளையாட்டுவிழாவை நடத்தும் உரிமையை பெறுவதற்கு போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் அம்பாந்தோட்டையில் போட்டிகளை நடத்துவதற்கான உரிமையை பெறுவதற்கான பிரசாரக்குழுவின் தலைவரான அஜித்நிவாட் கப்ரால் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஏற்கனவே இவ் உரிமையை பெறும் திட்டத்திற்காக ஒரு மில்லியன் டொலர் செல விடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பி.எம்.பி லீகஸி எனும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றை 6 மாதங்களுக்கு இலங்கை ஒப்பந்தம் செய்துள்ளது.

ஆலோசனைக் கட்டணங்களாக 26 மில்லியன் ரூபாய் அந் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டு விழாவின்போது பொது நலவாய விளையாட்டு விழாவிற்கான பெரும்பாலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் பூர்த்தியாகிவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

1998ஆம் ஆண்டு கோலாலம்பூரில் பொதுநலவாய போட்டிகளை நடத்தியதன் மூலம் மலேசியாவிற்கு கிடைத்த நன்மைகள் அம்பாந்தோட்டையில் பொது நலவாயப் போட்டிகளைநடத்துவதன் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் பெரும் எண்ணிக்கையான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் இவ் போட்டிகளை நடத்துவதன் மூலம் 30 வருடகால யுத்தம் மற்றும் 2004 ஆம் ஆண்டின் சுனாமி அழிவுகளில் இருந்து இலங்கை மீண்டு வரமுடியும் எனவும் அவர் கூறினார். (எ-5)

**காணிகள் விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையிலும் நெல்லியடி சந்திக்கு அருகாமையிலும் காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0776286645

**ஆனந்தி திருமண சேவை**
**மணமகன் தேவை**

அத்தம் (4),1985ல் பிறந்த கிரக பாவம் 22, சூரியன், செவ்வாய் 6ல் உள்ள தனியார் வங்கியில் பணி புரியும் பெண்மணிக்கு ஏற்ற மணமகனைத் தேடுகின்றோம்.
தபால்,நேரடி,தொலைபேசி மூலம் (0212228708) தொடர்பு கொள்ளலாம்.
V.A. சிவராசா, ஜோதிடர்
56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(5195)

**வீடு வாடகைக்கு**

யாழ்.நகரில் இருந்து 1/2 Km தூரத்தில் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியில் 129A இலக்கமுடைய 2 மாடி வீடு, 2 ரூம் AC யுடனும், 2 ரூம் Non AC யுடனும், Kitchen Room, Dining Room, Garage போன்ற சகல வசதிகளோடு கூடிய வீடு வாடகைக்கு உள்ளது.
தொடர்புக்கு: 0776612444
(5193)

# இந்திய தரப்பிலிருந்து ஆக்கபூர்வமான உதவிகள் எதனையும் காண முடியவில்லை

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியத் தூதுக்குழுவினர் கொழும்புக்கு வருகைதந்த நோக்கம் குறித்து பெரும் குழப்பமாக உள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இன்னமும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கும் உதவுவதற்குமான துரிதமான முன்நகர்வுகளை பாக்குநீரிணைக்கு அப்பால் இருந்து பார்க்க முடியவில்லை.

தொப்புள் கொடி உறவுகளையே காலாதி காலமாக தமிழ்மக்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுவதற்கான ஆக்கபூர்வமான உதவிகள் எதுவும் இந்தியத் தரப்பிலிருந்து கிட்டுவதற்கு சாதகமான அறிகுறிகள் எதனையும் காணமுடியவில்லை. இந்த விடயம் தமிழ்மக்களுக்கு விரக்தியையே கொடுத்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர்மேனன் ,வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோர் அடங்கிய இந்தியத்தூதுக் குழு இலங்கைக்கு இருநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளது. இந்நிலையில் இந்தியத்தூதுக்குழுவின் வருகை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் யுத்தம் முடிவடைந்து இரு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் இயல்பு வாழ்க்கைக்காகவும் அரசியல் தீர்விற்காகவும் ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்கு இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவின் வருகை மூலம் சாதகமான சமிக்ஞைகள் எவையும் கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு வந்திருந்த இந்தியத் தூதுக் குழு அரச தரப்பினருடனும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்துடன் அரசியல் ஏற்பாட்டிற்கு வருவது தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவிடயம் என இந்தியக்குழு தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது கூறியுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த பின்னணியிலேயே அரியநேத்திரன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இச்சந்திப்புக்குறித்து நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையும் வலியுறுத்தலுமான அரசியல் தீர்வு தொடர்பாக எந்தவொரு யோசனைகளையும் இந்தியக் குழுவினர் முன்வைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் கௌரவமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான அவர்களின் கோரிக்கைக்கு முழுமையான ஆதரவை அளிப்பதாக இந்தியத் தூதுக்குழுவினர் உறுதியளித்திருந்ததாகவும் ஆனால் எந்தவொரு அரசியல் இணக்கப்பாடு தொடர்பாகவும் பரிந்துரை செய்திருக்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## விலங்குவிசர் நோய் தடுப்பூசியேற்றல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை பழம் வீதி சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மணற்தறை ஒழுங்கையிலுள்ள சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9 மணிதொடக்கம் 11 மணிவரை பலாலி வீதி கந்தர்மடம் சனசமூக நிலையத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை மணற்தறை வீதி சிவன் கோவிலடி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது. எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## இணுவில் கந்தசுவாமி ஆலய பெருமஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இணுவில் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ பெருவிழா கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பெருமஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலைப் பூசையைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமானுக்கு ஆயிரத்தெட்டு சங்குகளால் விசேட அபிஷேகம் இடம்பெற்று சுவாமி வீதி உலா வரவுள்ளார்.

அத்துடன் மாலை வேளையில் விசேட மேளக் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

ஈழத்தின் தலை சிறந்த தவில், நாதஸ்வர கலைஞர்களினால் மேளக்கச்சேரி நடத்தப்படவுள்ளது.

மேலும் வருடாவருடம் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்ய வருவதால் பக்தர்களின் வசதி கருதி குடிநீர், சுகாதாரம், வாகனப் பாதுகாப்பு ஆகியனவற்றை பொலிஸ் உத்தியோகத்தர்களும் சாரணர் அணியினரும் ஒன்றிணைந்து தமது உதவிகளை வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)





த பினான்ஸ் கம்பனி பீஎல்சீ
பலத்துடனும் ஸ்திரத்தன்மையுடனுமான ஒரு புதிய இலக்கு
1940 இல் நிறுவப்பட்டது
மத்திய வங்கியின் நாணயச் சபையுடன், 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
கம்பனி பதிவு இலக்கம் PQ-1

நெல்லியடி கிளை
இல.36, பிரதான வீதி, நெல்லியடி
தொலைபேசி 021 226 4170

நிலையான வைப்பு • சேமிப்பு வைப்புகள் • வாடகைக் கொள்வனவு • தங்கக் கடன்கள் • விரைவுக் கடன்கள் • சொத்துக்கள் கொள்வனவும் விற்பனையும் • சொத்து அபிவிருத்தி








மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான வருடாந்த ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையுரையாற்றுவதையும் முதல் இடத்தைப் பெற்ற உடுவில் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் எயூஜின் மசனட்டிற்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் விருது வழங்கி கௌரவிப்பதையும் விழாவில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## மணிவிழாக்காணும் யாழ். வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்தின் மணிவிழா இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்பத்தில் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபரும் மணிவிழாக்குழுத் தலைவருமான வீ.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்தந்தை ஜெரோ செல்வநாயகம் வரவேற்புரையை நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மௌலவி எம்.எச். அப்துல் அசீஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரையினை பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவாணந்தா, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்விப் பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதி செயலாளர் வே.தி. செல்வரட்ணம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.பதில் வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், யாழ். தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்ரமணியம், வலம்புரி நாளிதழ் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், யா/அத்தியார் இந்துக்கல்லூரி ஆசிரியர் ம.ரெங்கநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கடவுளின் குழந்தைகள் நிறுவனத்தால் நடத்தப்படும் விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்கு அளவை வடக்கு காட்டுப்புளியடி சிவானந்தா விளையாட்டுக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியில் புலோலி சிறுவர் கிராமம் மற்றும் அச்சுவேலி சிறுவர் காப்பகத்தில் உள்ள விசேட தேவையுடைய சிறுவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் பிரதம விருந்தினராக மந்திகை வைத்தியசாலையின் வைத்தியகலாநிதி பி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக புலோலி தெற்கு கிராம சேவகர் குமாரகுரு, என்.கோமளா, கௌரவ விருந்தினராக புலோலி மெதடிஸ்த மிஷன் அதிபர் கே.சண்முகராஜா, புலோலி மகா வித்தியாலய அதிபர் ஏ.ரங்கநாதன், திக்கம் கிராம சேவகர் ஏ. ரங்கநாதன் ஆகியார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

## சிறுவர் சேமிப்புக்கணக்கினை பேணி வருவோருக்கு...

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடை பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாண மேற்தரக்கிளையில் சிறுவர் சேமிப்பு கணக்கினை பேணி வருபவர்கள் தங்களது ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதில் புலமைப்பரிசில் பரீட்சையின் சான்றிதழ், வைப்புப் புத்தகம் என்பவற்றோடு ஒரு வாரத்திற்குள் வங்கிக்கு வருகை தருமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

## தரம்-1 இற்கு மாணவர் அனுமதி

(பொலிகண்டி)

யாழ். நெல்லியடி மெதடிஸ்த மிஷன் த.க பாடசாலையின் 2012 ஆம் ஆண்டிற்கான தரம் 1 மாணவர் அனுமதிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை நாட்களில் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமெனவும் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-48)

## மோட்டார் சைக்கிள் திருட்டு; சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் 9 மணியளவில் வீட்டு வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை மோட்டார் சைக்கிள் உரிமையாளர் பிடித்து யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பொலிஸார் குறித்த நபரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளை எடுத்துசென்றதை பலர் கண்டுள்ளனர் என உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த நபரை பிடிக்கும் போது அவரிடம் மோட்டார் சைக்கிள் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மோட்டார் சைக்கிள் திருட்டுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஆரிய குளத்தடியைச் சேர்ந்தவர் என பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவருகிறது. (ஸ்ரீ-3)

## கட்டட படவரைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபையினரால் கட்டட படவரைஞர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு தகுதியுடையோர் விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து படவரைஞர் சான்றிதழின் பிரதியுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ பருத்தித்துறை நகர சபைக்கு அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் ந.செவ்வேள் அறிவித்துள்ளார்.

கட்டடங்களை அமைப்பது அதிகரித்துக் கொண்டு செல்வதனால் கட்டட படவரைஞர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஸ்ரீ-3)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டத்தில் நடைபெறவுள்ளதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் என். திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு இப்பிரதேசத்தின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடவுள்ளார். (ஸ்ரீ)

## நயினாதீவில் இலங்கைவங்கி கிளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் நயினாதீவு விரிவாக்கற்கிளை இன்று காலை 11 மணிக்கு நயினாதீவு பிரதான வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க கலந்து கொண்டு இவ்விரிவாக்கற்கிளையை திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு அனைத்து வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ஸ்ரீ)

யாழ். செய்திகள்

## இறுவெட்டு வெளியீட்டு விழா

(நல்லூர்)

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தசுவாமி கோயில், கந்தன் பக்திப் பனுவல்கள் இறுவெட்டு வெளியீடு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி கோவில் முன்றலில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் க.இ.இராசசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை காட்டுமலை கந்தசுவாமி கோவில் பிரதம குரு சிவசுப்ரமணியம் ஐயர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியரும் ஸ்ரீசத்திய சாயி இணைப்புக் குழு ஆன்மீக இணைப்பாளருமான செ.பகீரதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ்.வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ. வேதநாயகம் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-134)

# தபால் கட்டணங்களை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தபால் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பில் தபால் சேவைகள் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக தபால் சேவைகள் அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

தபால் திணைக்களதிற்கு தற்போது ஒரு கடிதத்திற்கு 12 ரூபா வீதம் நஷ்டம் ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தபால் சேவைகள் அமைச்சினால் ஓர் இடத்தில் இருந்து மற்றுமொரு இடத்திற்கு கடிதமொன்றை அனுப்புவதற்கு ஐந்து ரூபா பணம் அறவிடுகின்ற போதிலும் அந்தக் கடிதத்திற்கு 17 ரூபா செலவிடப்படுவதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தபால் சேவைகள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்குவதாகவும் ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தொலைத்தொடர்பு சேவைகளிலும் நஷ்டம் ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தொலைத்தொடர்பு சேவையூடாக தகவலொன்றை வழங்குவதற்கு 257 ரூபா செலவிடப்படுகின்ற போதிலும் தபால் சேவைகள் அமைச்சு மணித்தியாலத்திற்கு மூன்று ரூபா 50 சதமே அறவிடுவதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சினால் தபால் மா அதிபரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உள்ளிட்ட பலர் உள்ளடங்குவதாக ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

தற்போது அவர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும் எவ்வித தீர்மானத்தையும் இதுவரையில் எடுக்கவில்லை என தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



ஒன்பதாம் திருவிழா (15.06.2011)

ஆறுதல் தர வாராய் ஆறுமுகா!

விஞ்சு புகழ் இணுவையிலே
வீற்றிருக்கும் திருக் குமரா...
அஞ்சுதல் இல்லை என்றே
ஆறுதலை நீ தரவே...

வள்ளி, தெய்வயானை அங்கே
உன்வலமிடமாய் அமர்ந்திருக்க
வெள்ளி மயில் மீதிலே
உன் வீதி உலாக் கண்டு மகிழ்வோமே

சண் ஜெகன்

(5114)

9 ஆம் திருவிழா உபயகாரர்

# ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்ய பொன்சேகாவுக்கு நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிரான மேல் முறையீட்டு மனுவின் மீதான ஆட்சேபனை மனுவுக்கு மேலதிக ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

மேற்படி ஆட்சேபனை மனுவை சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் ஜுலை மாதம் 28 ஆம் திகதி வரை சரத் பொன்சேகாவுக்கு கால அவகாசம் வழங்குவதாகவும் நீதிமன்றம் அறிவித்தது.

முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக சரத் பொன்சேகா மேன்முறையீட்டு மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதன் பின்னர் அந்த மனு மீது ஆட்சேபனை மனுவொன்றை இராணுவத்தளபதி ஜகத்ஜயசூரிய தாக்கல் செய்திருக்கின்றார்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போது தற்போதைய இராணுவ தளபதியின் சார்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவிற்கான மேலதிக ஆட்சேபனையை தெரிவிப்பதற்கு தமக்கு அனுமதியளிக்குமாறு சரத் பொன்சேகா சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்துடன் முதலாவது இராணுவ நீதிமன்றம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவுக்கு எதிராக இராணுவ தளபதியினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனை மனு தொடர்பில் மேலதிக ஆட்சேபனையை வெளியிடுவது அவசியம் என்றும் சரத்பொன்சேகா சார்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் சரத் பொன்சேகாவின் கோரிக்கைக்கு அனுமதியளித்த அதே வேளை ஜுலை 28 ஆம் திகதிவரை கால அவகாசமும் வழங்கியது.

சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேற்முறையீட்டு மனுவில் முதலாவது இராணுவ நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் தம்மை பதவியிலிருந்து நீக்குமாறு தீர்ப்பளித்தமை முறையற்ற நடவடிக்கை என சுட்டிக்காட்டப்படிருந்தது.

அத்துடன் முதலாவது இராணுவ நீதிமன்ற விசாரணைகளின் போது சட்ட ரீதியாக சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பினை பெறுவதற்கு தனக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

எனவே, தடை உத்தரவை பிறப்பிப்பதன் மூலமாக இந்தப் தீர்ப்பு நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா அந்த மேன்முறையீட்டு மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன் பின்னர் தற்போதைய இராணுவத் தளபதி சார்பில் ஆட்சேபனை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# முன்னாள் போராளிகளுக்கு பிரிட்டன் 90 மில்.ரூபா உதவி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் மீள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக பிரித்தானிய அரசு சுமார் 90 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளதாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான பிரித்தானிய உதவி உயர்ஸ்தானிகர் மார்க் கூடிங் அறிவித்துள்ளார்.

இந்த நிதி அரசாங்கத்தின் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைப்பு பணிகளின் ஒரு பகுதியாக குடிவரவுக்கான சர்வதேச ஸ்தாபகத்தினால் மேற்கொள்ளப்படும் திட்டமொன்றுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த விஜயத்தின் போது தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையம் மற்றும் தெல்லிப்பழை கொல்லகலட்டி பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களை இவர் சந்தித்துடன் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

இதேவேளை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளுக்காக 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை வழங்கவுள்ளதாக பிரித்தானியா அண்மையில் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-5)

# மாதகல் பகுதியில் பன்றித் தொல்லை

(மாதகல்)

மாதகல் பகுதியில் விவசாய நிலங்களையும் பயிர்களையும் பன்றிகள் சேதப்படுத்தி வருவதாக அப்பகுதி விவசாயிகள் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்.

இப் பன்றிகள் மாதகல் கடற்கரையிலுள்ள பற்றைகளிடையே இருந்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

எனவே. இப்பற்றைகளை அழித்து இப் பன்றித் தொலையை நீக்கி விடுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.

(ஸ்ரீ-47)

# பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்த இலங்கையர் உட்பட 22 பேர் விடுவிப்பு

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கோரப்பட்ட கப்பப் பணம் வழங்கப்பட்ட நிலையில் அவர்களால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவர் உட்பட 22 கப்பல் ஊழியர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் மேற்படி கடற்கொள்ளையர்களால் எம்.வி.சுயெஸ் என்ற கப்பல் அதன் பணியாளர்கள் 22 பேருடன் கடத்தப்பட்ட நிலையில் அதனை விடுவிப்பதற்காக 2.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கப்பமாக கோரப்பட்டிருந்தன.

இவ்வாறு அவர்களால் கோரப்பட்ட பணத்தை நன்கொடைகள் மூலம் சேகரித்த அன்சார் பேர்ணி என்பவர் மேற்படி கடற்கொள்ளையர்களுடன் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொண்டிருந்தார்.

குறித்த கடற்கொள்ளையர்களால் பிடிக்கப்பட்டிருந்த பணயக் கைதிகளை கொல்லப் போவதாக அவர்கள் பலமுறை மிரட்டிய போதும் கப்பப் பணம் திரட்டும் முயற்சி நடைபெறுவதாகக் கூறி தமது கால அவகாசத்தை நீடித்துக் கொண்டார் அன்சார் பேர்ணி.

இந்நிலையில் விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளுள் 6 இந்தியர்கள், 4 பாகிஸ்தானியர்கள், 11 எகிப்தியர்கள் மற்றும் இலங்கையர் ஒருவர் அடங்கியதாக கப்பலின் தலைவரான வாஸி கூறியுள்ளார்.

இவர்களில் அநேகமான பணயக் கைதிகள் சுகாதாரமற்று இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...



சரவணா ரெக்ஸ்



770, 772, கே.கே.எஸ். வீதி
(கட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421

526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம். 021 222 1723

Email: nallur.saravana@gmail.com

## இன்று ஒரு தகவல்

# மனிதனின் மகத்துவம்

யூதேயா மலைப்பகுதியில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருக்கிறது.

அங்கு இயேசுநாதர் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அவர் பிரமாண்டமான ஒரு தராசை அந்த மக்களுக்குக் காட்டுகிறார்.

அதுபோன்ற ஒரு தராசை அந்த மக்கள் அதற்கு முன்பு பார்த்ததே இல்லை. அவ்வளவு பெரிய தராசு அது!

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் அந்தத் தராசில் வைத்து இயேசுகிறிஸ்து எடை போடுகிறார்.

அந்தப் பெரிய தராசு ஆகாயத்திலிருந்து தொங்கவிட்டதுபோல் இருக்கிறது.

அந்தத் தராசில் ஒரு பக்கத்துத் தட்டில் அந்த யூதேயா மலைப் பகுதியையும், கண்ணுக்குத் தெரிந்த அத்தனை பொருட்களையும் இயேசு எடுத்து வைக்கிறார்; மலைச்சாரல்களில் வளர்ந்திருக்கும் ஒலிவ் மரங்களை எல்லாம் எடுத்து அவர் அதில் வைக்கிறார்.

மலையடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டு மந்தைக்களை எல்லாம் அதில் அவர் தூக்கி வைக்கிறார்.

அது வரையில் தோண்டி எடுக்கப்பட்ட தங்கம் முழுவதையும் அங்கே வைக்கிறார்.

உலகத்தில் இருக்கும் விலையுயர்ந்த எல்லாப் பொருட்களையும் அங்கே வைக்கிறார்.

இவ்வளவையும் இயேசு கிறிஸ்து இடது பக்கத் தட்டிலேயே வைக்கிறார்.

இந்தக் காட்சியை மக்கள் அனைவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர், "இன்னொரு தட்டில் வைப்பதற்கு மீதி எதுவுமே இல்லையே!" என்று தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் ஒரு பக்கத் தட்டிலேயே வைத்தாகிவிட்டது. அவ்வளவையும் ஈடு கட்டும் அளவுக்கு அடுத்த பக்கத்துத் தட்டில் எதை வைக்க முடியும்?

எல்லோரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுநாதர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். அவர் அங்கு பக்கத்தில் இருந்த ஒரு சின்னக் குழந்தையை எடுத்து வலது பக்கத் தட்டில் வைக்கிறார்.

அவ்வளவுதான்!

இடது பக்கத்தட்டு ஆட ஆரம்பித்தது... மெதுவாக மேலே போக ஆரம்பித்தது. மிக மிக உயரத்திற்குப் போய்விட்டது. அதில் இருந்த பொருட்களெல்லாம் கீழே விழுந்துவிடுமோ என்று நினைக்கும் அளவிற்கு ஆகிவிட்டது.

எல்லோரும் ஒன்றும் புரியாமல் இயேசு பெருமான் முகத்தைப் பார்க்கிறார்கள்.

அப்போது அவர் சொல்கிறார்:

"ஒருவர் தன் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்து உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொள்வதால் அவனுக்கு வரும் பயன் என்ன? ஒருவன் தன் ஆன்மாவுக்கு ஈடாக எதைக் கொடுக்க முடியும்?"

(மாற்கு 8:36-37)

இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

இந்த உலகத்தில் இருக்கும் எல்லாவற்றையும் விட அதிக விலையுயர்ந்தது விலை மதிப்பற்றது எது என்று கேட்டால், அது மனிதனின் ஆன்மாதான்- குழந்தை உள்ளம்தான். இந்த உண்மையையே மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சியின் மூலம் இயேசுநாதர் மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறார்.

இன்றைக்கு நாம் படும் கவலைகளுக்கெல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?

மனிதனின் மதிப்பை மனிதன் இன்னும் முழுவதும் புரிந்து கொள்ளவில்லை. அதுதான் காரணம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார் .

மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலர்களுக்கான வருடாந்த ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருவதைஅறியக் கூடியதாகவுள்ளது.

இதுதவிர சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களும் தற்போது அதிகரித்துள்ளது. இவை யாழ். குடாநாட் டின் கலாசாரத்தை சீர்குலைப்பதாகவுள்ளது.

வன்னியில் 8 வருடங்களாக அரசாங்க அதிபராக பணிபுரிந்துள்ளேன். அப்போது ஒரு பெண்கூட பாலியல் துஷ்பிரயோகத் திற்குட்படுத்தப்பட்டதாக முறைப்பாடுவந்ததில்லை. ஆனால் யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை பதவியேற்று ஒரு வருடத்திற்குள் பல முறைபாடுகள் வந்து விட்டன. தந்தையாலேயே மகள் துஷ்பிரயோகத்திற் குட்படுத்தப்பட்ட சம்பவம் கூட இங்கு இடம் பெற்றுள்ளது . இது எமது கலாசாத்தை பாதிக் கும் வகையிலேயே இடம் பெற்று வருகிறது. பெண் கள், சிறுவர்களுக்கு எதி ராக கட்ட விழ்த்து விடும் இந்த வன்முறைகள் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

யாழ். குடா நாட்டில் 500இற்கு மேற்பட்ட சிறுவர்கள் தமது கல்வியை தொடரமுடியாத நிலையில் உள்ளனர். அவர்கள் மீண்டும் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஶ்ரீ-6)

# யாழ்.வலயமட்ட சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான சித்திரப்போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. மணிக்கு யா/ மத்தியகல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறும்.

கோட்ட மட்டப் போட்டிகளின் போது முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களை சித்திரப் போட்டியில் பங்குபற்ற ஆவன செய்யுமாறு யாழ்.கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(ஶ்ரீ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 60 |
| தக்காளி | 30 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 90 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 45 | 80 | 60 |
| பாகற்காய் | 70-80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 35 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 100 | -- |
| பயற்றங்காய் | 70-80 | 80 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 |
| பீற்றூட் | 65 | 80 | 70 |
| கறிமிளகாய் | - | 80 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 350 |
| போஞ்சி | 120 | 120 | -- |
| கத்தரிதம்புள்ள | - | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 3-5 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 130 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

***15.06.2011***
***(வைகாசி 32, புதன் கிழமை)***
***சூரிய உதயம் காலை 5.55மணிக்கு***
***பூரணை பின்னிரவு 2.28மணிவரை***
***கேட்டை பின்னிரவு 1.58 மணிவரை***
***இராகுகாலம் - 11.53-1.23 மணி வரை***
***சுபநேரம்- 4.23- 5.53 மணிவரை***
***பூரணை விரதம்.***

**மேடம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்பட நேரிடும், ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**இடபம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் முன்னேற்றமடைவீர்கள்.

**மிதுனம்** கூட்டுத் தொழிலில் எதிர் பார்த்த இலாபம் கிடைக்கலாம், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகமுண்டு.

**கடகம்** கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை அமையலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**சிங்கம்** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், மாலையில் மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கந்தன் வழிபாடு முன்னேற்றம் தரும்.

**துலாம்** புதிய பாதை புலப்படும் நாள், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடிவருவர், உத்தியோக உயர்வுண்டு, வாக்கு மேன்மையுண்டு

**விருச்சிகம்** வாழ்க்கைப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், வருமானம் திருப்தி தரும் நாள், தொலைபேசி மூலம் ஆர்வம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** இடமாற்றத்தால் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம்.

**மகரம்** தொழில் முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும், பயணவாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், உறவினர் வருகையுண்டு.

**கும்பம்** அந்நியர் உதவியுண்டு, என்றோ நடக்குமென நினைத்த காரியம் இன்று நடைபெறும், கௌரவமான நாள், தொழிலில் நன்மையுண்டு.

**மீனம்** தடைகள் விலகி காரியம் நடைபெறலாம், திடீர் பயணங்களால் அனுகூலமுண்டு, விலகிச்செல்பவர்கள் விரும்பி வந்து சேருவர், உடல்நலம் சீராகும்.

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 08


ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு


## பகுதி - I


- 01 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள மூன்று விடைகளில் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

- கீழே 01 ஆம் 02 ஆம் வினாக்களில் முதலில் உள்ள பாடல் விபரிக்கின்ற படத்தை தெரிவு செய்க.




01) இரண்டு காலால் மிதித்தே நாம்
இனிய பயணம் செய்கின்றோம்
இரண்டு வட்டக் கால்களினால்
இதமாய் எம்மைச் சுமக்கிறதே



1)


2)



3)

02) காலையாகி நாமெல்லாம்
கண்விழிக்கக் காரணமாம்
மாலையாகி அவன் மறைய
மானிடர் நாம் கண்ணயர்வோம்


1) 
2) 
3) 




03) படம் B யுடனும் D யுடனும் தொடர்புபடும் உரு கீழ்வருவன வற்றுள் எது?

1) 
2) 
3) 

04) படம் A யுடனும் C யுடனும் தொடர்புபடும் உரு கீழ்வருவன வற்றுள் எது?

1) 
2) 
3) 

- கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, 5ஆம் 6ஆம் வினாக்களுக்கு விடை தருக.

ஆலையிலே சோலையிலே
ஆலம்பாடிச் சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு

05) இப்பாடல் ஒரு -
1) சந்தைப்பாடல் 2) வயல்பாடல்
3) விளையாட்டுப் பாடல்


06) பாடலில் குறிப்பிடப்படாத ஓர் விளையாட்டு உபகரணத்தின் பெயர் யாது?
1) பந்து 2) கிட்டிப்புள் 3) பம்பரம்

07) ஆழமறியாமல் காலை விடாதே. இப்பழமொழியின் கருத்து யாது?
1) எதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்
2) பலசாலியும் தோல்வியடையலாம்
3) ஒருவரின் தன்மையை அறிந்து உதவுதல்


08) 'வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்' இக்கருத்தைக் கூறும் பழமொழி யாது?
1) இளங் கன்று பயமறியாது
2) இரக்கப் போனாலும் சிறக்கப்போ
3) ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்

A, B, C, D, E, F, G, H, I, J, K, L, M, N, O, P, Q, R, S, T, U, V, W, X, Y, Z

09) A தொடக்கம் Z வரையான மேலுள்ள எழுத்துக்களில் சமச்சீர் தன்மையுடைய எழுத்துக்கள் எத்தனை உள்ளன?
1) 9 2) 11 3) 13

10) 
முக்கோணவடிவமுள்ள இக்காணியைச் சுற்றி 12 தூண்கள் சமஇடைவெளிகளில் நாட்டப்பட்டுள்ளன. எனவே இக்காணியின் ஏதாவது ஒரு பக்கத் திலிருந்து நோக்கும்போது எத்தனை தூண்களை அவதானிக்கலாம்?
1) நான்கு 2) ஐந்து 3) ஆறு

11) 'வாயினால் தின்பான்; வயிற்றினால் கக்குவான்; சிவப்பு நிறத்தான்' அவன் யார்?
1) கடிதஉறை 2) அடுப்பு 3) தபால் பெட்டி




இவ்வட்ட வடிவக் கிராமத்தில் வாழும் A என்பவர் நண்பர்களான B, C, D, E, F, G, H ஆகியோரிடம் ஒழுங்குமுறையில் சென்றார். (B யிடம் சென்று, C யிடம் சென்று, D யிடம் சென்று ... இவ்வாறு எழுத் துக்களில் ஒழுங்குமுறையில் சென்றார்.)

12) அவர் H நண்பரைச் சென்றடைந்தபோது வட்டத்தின் மையத்தை எத்தனை தடவைகள் கடந்திருப்பார்.
1) 3 தடவைகள் 2) 4 தடவைகள் 3) 5 தடவைகள்

13) A யிலிருந்து நேர்கோடு வழியே B வரையிலான தூரம் 3 கிலோமீற்றரும், B யிலிருந்து B வரையான தூரம் ஒரு கிலோமீற்றரும் எனின், அவர் C நண்பர் வரை பயணித்த தூரம் யாது?
1) 11 கிலோமீற்றர் 2) 15 கிலோமீற்றர் 3) 18 கிலோமீற்றர்


- கீழுள்ள கூடுகளில் காணப்படும் பொருட்களின் விலைகளை அவதானித்து, விடை தருக.

| 4 கொப்பி | 2 பென்சில் | ஒரு பேனா | 2 கலர் பெட்டி |
|---|---|---|---|
| 48.00 | 12.00 | 12.00 | 48.00 |

14) விலைகள் சமமாக உள்ள பொருட்கள் இரண்டும் எவை?
1) கொப்பி, பென்சில் 2) கொப்பி, பேனா
3) பென்சில், பேனா

15) ஒரு கலர் பெட்டி வாங்கும் பணத்திற்கு எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?
1) நான்கு 2) ஆறு 3) எட்டு

- கீழே மின்குமிழ்கள் தொடர்பான விளக்கப் படங்களையும் வாசித்து, விடை தருக.




**பிரகாசம் குறைந்த ஒரு மின்குமிழ் 8 மின்குமிழ்களுக்கு சமனாகும்.**
**பிரகாசம் கூடிய ஒரு மின்குமிழ் 6 மின்குமிழ்களுக்கு சமனாகும்.**

- மேலுள்ள படம் மற்றும் அறிவுறுத்தல்களின் விளக்கங்களின்படி

16) பிரகாசம் குறைந்த மின்குமிழ்கள் வீடு A யிலா B யிலா அதிகம்.
(...............)

(14ஆம் பக்கம் பார்க்க)

# உங்கள் இராசியும் அஷ்டமத்துச் சனியின் அற்புதங்களும்

ஜென்ம இராசிக்கு எட்டாமிடத்தில் சனி வாசம் செய்யும் காலம் அஷ்டமத்துச் சனி என்று பெயர் பெறுகிறது.

பொதுவாக, ஒரு ஜாதகத்தில் சுப கிரகங்களை விட பாவ கிரகங்களே அதிக யோக பலன்களை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது கெடுதல் செய்யும் போதும் அதிகமாக கெடுதல் செய்பவர்கள் ஆவார்கள். நன்மை செய்ய வேண்டும் என்று ஆரம்பித்தால் இவர்களைப் போல் நன்மை செய்ய சுபக்கிரகங்களால் கூட முடியாது.

குறிப்பாக இந்த சனி பகவான் நாம் மேலே சொல்லப்பட்டவைக்கு உகந்தவர் ஆவார். இவர் ஒரு ஜாதகத்தில் ஆறில் அமர்ந்து தன் திசையை நடத்தும் பொழுது பெரும் இராஜ யோகத்தையே செய்து இருக்கிறார் என்பது நாம் அனுபவ ரீதியாக கண்ட உண்மை.

இனி,

அஷ்டமத்துச் சனி யார் யாருக்கு நன்மை, யார் யாருக்கு தீமை செய்யும் என்பதை சற்றுக் கவனிப்போம்.




### மேடம்

இந்த இராசி நேயருக்கு சனி பகவான் 10,11 க்கு உடையவர் என்றாலும், செவ்வாய்க்கும் சனிக்கும், ஒற்றுமை இல்லாததால் அஷ்டமத்துச் சனி காலத்தில் இவர்கள் சொல்லொண்ணாத் துன்பம் அடையக் கூடும். எனவே, எதிலும் முன்ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

அதாவது, நல்லபடியாக நடந்து வரும் தொழிலை மற்றவர்களின் சொல்கைக் கேட்டு மாற்றியமைத்து அதன் மூலம் தனவிரயம் ஏற்படுதல், யாரோ செய்த தவறுக்கு தான் பொறுப்பேற்று நடத்தல், இதனால் கெட்ட பெயரும் வீண் மனஸ்தாபமும் ஏற்படுதல், தாய், தந்தை, உடன் பிறந்தோருடன் மனஸ்தாபமும், குடும்பத்தை விட்டு பிரிந்திருத்தலும், கடன் அதிகப்படியாக வாங்கிவிட்டு அதை அடைப்பதற்காக சொத்துக்களை விற்பது போன்ற தீமைகள் அஷ்டமத்துச் சனியால் ஏற்படக் கூடியவற்றில் ஒரு பகுதியாகும்.

### இடபம்

இந்த இராசிக்காரர்களுக்கு சனி பகவான் தான் யோகக்காரன் ஆவார். இவர் எட்டாவது வீட்டில் சஞ்சரிக்கும் போது எட்டாவது வீடு குரு வீடாகையால் இங்கு சனி இருக்கும் போது கெடுதலுக்கு பதில் நன்மையான பலன்களே அதிகம் நடைபெறும்.

அதாவது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வும், புதிய தலைமைப் பதவியை வகிப்பதும், தொழில் சம்பந்தமான இடமாற்றமும், கல்யாணம் ஆகாத வயதினராய் இருந்தால் கல்யாணம் நடைபெறுதலும், புத்திரப்பேறு இல்லாதவர்களுக்குப் புத்திரப்பேறு ஏற்படுதலும் , சுப நிகழ்ச்சிகள் நடைபெறுதலும் போன்ற நன்மையான பலன்கள் ஏற்படும்.

### மிதுனம்

இந்த இராசிக்காரர்களுக்கு சனி பகவான் 8,9 ஆம் இடத்து அதிபதி ஆகிறார். 8 ஆம் வீடு சனிக்குத் தன் சொந்த வீடாக அமைந்தமையால் கெடுதலான பலன்களையும், நன்மையான பலன்களையும் செய்யமாட்டார். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பார்.

### கடகம்

இந்த இராசிக்காரர்களுக்கு சனி பகவான் 7,8இக்கு உடையவர் ஆகிறார். மேலும் , சந்திரன் இவருக்கு பகைக் கிரகமாக ஆகிறார்.

ஆகவே, இவர்கள் சொந்த வீட்டில் அமர்ந்தாலும் கெடுதலான பலன்களையே செய்யக் கூடும். எனவே கவனத்துடன் செயற்படுவது நல்லது.

### சிம்மம்

இந்த இராசிக்கு சனி பகவான் ஆறு, 7 இற்கு உடையவர் ஆகிறார். மேலும் சூரியனுக்கு இவர் பகைக் கிரகம். எனவே, இவர்களுக்கும் அஷ்டமத்துச் சனியில் கெடுதலான பலன்களே நடைபெறும் என்று சொல்ல இடமளித்து விட்டார் சனி பகவான்.

### கன்னி

இந்த இராசிக்காரர்களுக்கு சனி பகவான் 5,6 இற்கு உடையவர் ஆகிறார். இவர் இராசி நாதனுக்கு நட்பானாலும் 8 ஆம் இடம் செவ்வாயின் வீடாகும். மேலும் அங்கு நீச்சமும் அடைகிறார். ஆகவே, புத்திரர்களின் மூலமும் கடன்களின் மூலமும் அநாவசியமான மனக் கவலையை உண்டாக்குவார்.

### துலாம்

இந்த இராசிக்காரர்களுக்கு இவர் தான் யோகக்காரர். மேலும் 8 ஆம் இடம் தன் நண்பனான சுக்ரனுடைய வீடாகும். ஆகவே, இவர்களுக்கு அஷ்டமத்துச் சனி காலத்தில் நன்மையே ஏற்படும் என்று சொல்ல இடமுண்டு.

சுபச் செலவுகள் அதிகப்பட்டு காணும். உத்தியோகம், தொழில் சம்பந்தமாக அயல் நாட்டுப் பயணம் மேற்கொள்ள நேரிடும். புதிய பூமி, வீடு, வாகனம் வாங்குதல், வியாபாரத்தின் மூலம் நல்ல இலாபமும் நேரிடும்.

### விருச்சிகம்

இந்த இராசி அன்பர்களுக்கு 3,4 ஆம் வீட்டிற்கு அதிபதி ஆனாலும் செவ்வாய்க்கு ஆகாதவர் ஆகிறார். ஆகவே, இவர்களுக்கு சனி 8 இல் சஞ்சரிக்கும் காலம்.குடும்பத்தை விட்டு பிரிதல், வீண் கடன் தொல்லைகள், மனஸ்தாபம், வீண் பணவிரயம், விபத்துக்கள், அடிக்கடி நோய் நொடிகள் தோன்றி மறைதல் போன்ற கெட்ட பலன்களையே சொல்ல இடமுண்டு.

### தனுசு

இந்த இராசிக் ாரர்களுக்கு சனி பகவான் 2,3 ஆம் இடத்திற்கு அதிபதியாகிறார். மேலும் இவர் குருவுக்கு மிகவும் வேண்டியவர் ஆதலால் இவர்களுக்கு அஷ்டமத்துச் சனியின் மூலம் அவ்வளவு நன்மை இல்லை.

இவர்களுக்குத் தான் இவ்வருடம் அஷ்டமத்துச் சனியாகத் திகழப் போகிறது. அதனால் இந்த இராசிக்காரர்கள் எந்தவித பயமோ பீதியோ அடையத் தேவையில்லை. குரு பார்வை இந்த இராசிக்காரர்களுக்கு இருக்கும் வரையில் இவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. எனவே, எந்தவித புதுமுயற்சிகளிலும் தைரியமாக ஈடுபடலாம். 50% கெடுதல் என்றால் அடுத்த 50% நன்மையே செய்வார் என்பது ஜோதிடத்தின் மூலம் இந்த இராசி நோயர்களுக்கு நாம் கூறும் அறிவுரையாகும்.



### மகரம்

இவர்களுக்கு இராசியாதிபதியும் தனாதிபதியும் இவரே ஆவார். மேற்கொண்டு 8 ஆம் வீடு தன் தந்தையான சூரியனின் வீடாகும். இவர்களுக்கும் அஷ்டமத்துச் சனி காலத்தில் கெடுதலும் இல்லை, நன்மையும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

### கும்பம்

லக்ன விரயாதிபதியான இவர் தன் நண்பனான புதன் வீட்டில் அமர்ந்தாலும் விரயாதிபதி விரயாதிபதி தானே. எனவே, வீண் விரயங்களும் வீண் அலைச்சலும் மனச் சஞ்சலமும் ஏற்படுத்த தவறமாட்டார். சிறிது காலம் குடும்பத்தை விட்டுப் பிரிந்து இருக்கும் படியும் செய்து விடுவார்.

### மீனம்

இவர்களுக்கு இலாப விரயஸ்தானத்திற்கு அதிபதியாகிறார். மேலும் 8 ஆம் வீடு இவருக்கு உச்ச வீடாகும். எனவே, தீர்க்காயுளையும் நன்மையான பலன்களையுமே வாரிவழங்குவார். அதாவது நியாயமான சுபச் செலவுகள் ஏற்படும். அடிக்கடி வெளியூர்ப் பயணமும் அதன் மூலம் நன்மையும் ஏற்படும்.

புதிய தொழில் ஆரம்பிப்பார். இரும்பு சம்பந்தமான வியாபாரத்தின் மூலம் அதிகம் இலாபம் கிடைக்கும்.

உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு நன்கு காணப்படும் . பிள்ளைகளின் மூலமும் நன்மையுண்டு.

இந்த நற்பலன்கள் மீன இராசிக்காரர்களக்கு அஷ்டமத்துச் சனியால் ஏற்படக் கூடிய ஒரு சிறு பகுதியாகும்.

# மாணவ குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் குடும்பநல உத்தியோகத்தருக்கான பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த (120/102) பயிற்சியாளர்களை மாணவ குடும்பநல உத்தியோகத்தராக நியமனம் செய்யும் பொருட்டு நாளை வியாழக்கிழமை அந்தந்த பிரதேச சுகாதார சேவை பணிமனையில் சேவை நிலையங்களை அறிந்து கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி. சி.சிவராணி தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணம், வவுனியா தாதிய பயிற்சிக் கல்லூரிகளிலும் அறிந்து கொள்ளலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ஶ்ரீ)

# நுளம்புப் பெருக்கம்; ஸ்தலத்தில் அபராதம் சுகாதார அதிகாரிகளுக்கு அதிகாரம்

(கொழும்பு)

நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பான எச்சரிக்கைகளை புறக்கணிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஸ்தலத்திலேயே அபராதம் விதிக்கும் அதிகாரம் சுகாதார அதிகாரிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

ஸ்தலத்திலேயே அபராதம் விதித்தல், தனியார் மற்றும் பொதுக் காணிகளில் நுழைந்து சோதனை மேற்கொள்ளல் ஆகிய அதிகாரங்களை வழங்கும் வகையில் நுளம்புப் பரவல் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நுளம்பு பெருகும் இடங்களை தூய்மையாக்குவதற்கு தற்போது வழங்கப்படும் இரு வார கால அவகாசத்தை ஒரு வாரகாலமாக குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-5)





பூநகரி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அண்மையில் பூநகரி ஜெயபுரம் மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், பூநகரி உதவி அரசாங்க அதிபர் கே.எஸ். வசந்தகுமார், மேலதிக அரச அதிபர் எஸ். ஶ்ரீனிவாசன் , இராணுவ உயரதிகாரி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-பூநகரி செய்தியாளர்)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

349. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டபின், "பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பொது அமைதியைப் பேணுவதற்கு அல்லது சமூகத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியப் படும் விநியோகங்களையும் சேவைகளையும் தொடர்ந்து பேணுவதற்கு அப்படிச் செய்வது பொருத்தம் என்பதால்" (பி.எஸ்.ஓ.)வும் அவசரகாலச் சட்டங்களை பிரகடனப் படுத்துவதை அனுமதிக்கின்றது.

2005 மற்றும் 2006 ஆம் ஆண்டு



களில் விரிவானமற்றும் பலவற்றை உள்ளடக்கிய அவசரகால ஒழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்பட்டு அவை காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு இன்றுவரை அமுலில் இருக்கின்றன. அவ்வொழுங்குவிதிகள் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல், ஆட்களைக் கண்காணித்தல் மற்றும் தேடுதல், போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தல், சொத்துக்களைக் கைப்பற்றல் அல்லது எடுத்தல் மற்றும் கூட்டங்கள், ஊர்வலங்கள், பிரசுரங்கள், துப்பாக்கிகள் மற்றும் பிரவேசத்துக்கான உரிமை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல் போன்றவற்றுக்கான பாரிய அதிகாரங்களை வழங்குகின்றன. அவை யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது அதற்கு முன்னர் மற்றும் அதற்குப்பின்னர் பரவலாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக 2010 மே மாதம் வரை அமுலில் இருந்த அத்திகதிவரை தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆட்கள் தொடர்பில் இன்றுவரை அமுலில் இருக்கும் 2005ஆம் ஆண்டின் ஒழுங்குவிதிகளின் ஒரு பகுதி பாதுகாப்புச் செயலாளர் உத்தரவின்பேரில் தேசியபாதுகாப்புக் காரணங்களுக்காக ஒரு வருடத்துக்கு மற்றும் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் படியான தடுத்துவைத்தலுக்கு அனுமதியளிக்கிறது.

350. அவசரகால ஒழுங்குவிதிகளுக்குப் புறம்பாக, திருத்தப்பட்டு பின்னர் 1982 இல் நிரந்தரச் சட்டமான 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத்தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தில் ஒப்பீட்டளவிலான அதிகாரங்கள் குறிப்பிட்டுள்ளன. இச்சட்டம் கடும் தண்டனைகளை (பாகம்-I)கொண்ட குற்றங்கள் வரிசையினை விளக்குவதோடு, சில பிரசுரங்களைத் தடை செய்வதற்கான (பாகம்-II) அதிகாரங்களையும் கொண்டுள்ளது. கைது செய்தல், தேடுதல், உட்பிரவேசித்தல் மற்றும் கைப்பற்றுதல் (பாகம்II) ஆகியவற்றுக்கான வரையறுக்கப்பட்டிராத அதிகாரங்களையும் குறிப்பிடுகிறது. நிருவாகத்தினால் கட்டளையிடப்பட்டவாறாக மூன்று மாத இடைக்காலத்துக்குட்பட்டவாறு 18 மாதங்கள் வரையிலான பாதுகாப்புக் காகத் தடுத்து வைத்தலையும் அது கொண்டுள்ளது. மற்றும் எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக அல்லது தொடர்புபட்டதாக ஒருவரை நம்புவதற்கு அல்லது சந்தேகப்படுவதற்குக் காரணம் இருந்தால், போக்குவரத்து அல்லது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டளையை இடுவதற்கான ஏற்பாட்டினையும் அது கொண்டுள்ளது. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது, அதற்கு முன்னர் மற்றும் அதன் பின்னர் பாரிய விளைவுகளைக் கொண்ட பிரிவுசட்டம் செறிவாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

### சட்டமா அதிபரின் சக்தியைச் சிக்கலாக்கும் பல வடிவமைப்புக் குறைபாடுகள் இலங்கைச் சட்டத்தில் காணப்படுகின்றன

351. அதனை அமுல் செய்வதில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் அல்லது புறக்கணிக்கப்பட்டவை தொடர்பாக சட்டத்தின் மூலம் பரிகாரம் தேடுவது பரவலாகத் தடுக்கப்பட்டுள்ளதானது அவசரகாலச் சட்டத்தின் குறிப்பானதொரு அம்சமாகும். அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவது தொடர்பில், நீதிமன்ற மீளாய்வுக்கு முழுமையான தடையொன்றை அரசியல் யாப்பு வழங்குகின்றது. சட்டரீதியிலான ஆய்வைத்தடுக்கும் மூன்று தெளிவான மற்றும் விரிவான பிரிவுகளை (பி.எஸ்.ஓ.) குறிப்பிடுகிறது.

"மனப்பூர்வமான உள்நோக்கத்துடன்" மேற்கொள்ளப்பட்ட செயல்களுக்கும் பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் (பி.ஏ) சட்டத்தின் கீழ் இதுபோன்ற சட்ட மீளாய்வுக்கான தடையுள்ளது. மேலும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளரினால் விடுக்கப்படும் தடுத்துவைத்தல் மற்றும் தடைவிதித்தல் கட்டளைகள் சட்டப்படி இறுதியானவை எனக் கணிக்கப்பட்டு அவை எந்தவொரு சட்டமீளாய்விலிருந்தும் தடுக்கப் பட்டுள்ளன. (பி.எஸ்.ஓ) வில் அடங்கியுள்ள தடுத்தல் மற்றும் தண்டணையிலிருந்து விலக்களிப்புப் பற்றிய ஏற்பாடு அதன்கீழ் பிரகடனப் படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதாகும் என்பதோடு, அவசரகால ஒழுங்கு விதிகளிலும் அதே அணுகுமுறை மீளக் குறிப்பிடப்பட்டுள்ளது

352. 2010 மே மாதம் அவசரகால ஒழுங்கு விதிகளுக்கான திருத்தங்களின் மூலம் இத்தடைப்படுத்தும் எந்தவொரு பிரிவும் அகற்றப்படவில்லை பாரதூரமான விளைவுகளை அவை கொண்டிருந்த போதிலும், மாற்றமின்றி அவை அப்படியே இருக்கின்றன. இவ்வேற்பாடுகளின் திரண்ட விளைவுகள் காரணமாக அவசரகாலச் சட்டத்தின் அமுலாக்கத்தின்போது நடந்தேறிய செயற்பாடுகள் அல்லது தவறுகள் பற்றி, குறிப்பாக சந்தேகிக்கப்பட்ட பயங்கரவாதிகள் எனத் தடுத்துவைக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களில் தமது உரிமைகளைக் கோரும்திறன் கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### 2. சிவில் நீதிமன்றங்களில் குற்றவியல் அதிகார வரம்பு

(அ) சட்டமா அதிபர்: குற்றங்களைப் புலனாய்வு செய்தல் மற்றும் வழக்குத் தொடரல்

353. இலங்கையின் குற்றச் செயல்களின் புலனாய்வு மற்றும் வழக்குத் தொடரல்மீது சட்டமா அதிபருக்கு மிகவும் பரந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. காவல்த்துறையினர் மற்றும் நீதவான்கள் மேற்கொள்ளும் புலனாய்வுகள் சட்டமா அதிபரின் கட்டுப்பாடு மற்றும் பணிப்புக்கு உட்படுகின்றன. அதே போன்று, பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதா இல்லையா அத்துடன் குற்றங்களை நெறிப்படுத்திக் குற்றப்



பத்திரிகை தயாரித்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து வழக்குத்தாக்கல் செய்தல் ஆகிய அத்தனையும் சட்டமா அதிபரின் ஆதிக்கத்தின் கீழே உள்ளன. இவ்வாறாக சட்டமா அதிபர் குற்றவியல் நீதி அமைப்பில் மையத்தைக் கொண்டிருப்பதோடு, அதில் அவர் முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறார்.

பொறுப்புக்கூறலை பயனுறு விதத்தில் மேற்கொள்வதற்கு சட்டமா அதிபர் திறமையுடன் சுயாதீனமாகவும் அத்துடன் சட்டமா அதிபர் செயற்படுவதற்கு அவரை அனுமதிக்கும் சட்டமொன்றையும் குற்றவியல் சட்ட திட்டம் தேவைப்படுத்துகின்றது. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான மீறல்கள் தொடர்பான விடயங்களுக்கு இது ஏற்புடையதாகிறது.

354. நாட்டின் வரலாற்றில் குறிப்பான சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனத் தன்மை பற்றி சவால் விடுக்கப்பட்டுள்ளது. அது அண்மைக்காலங்களில் மேலும் நலிவடைந்துள்ளதால், யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் பற்றி அரசாங்கத்தின் அல்லது இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பற்றி அத்திணைக்களம் புலனாய்வுகளை மேற்கொள்வது தொடர்பில் இது ஒரு பிரச்சனையாகவுள்ளது. 2010 தேர்தல்களைத் தொடர்ந்து, ஒவ்வொரு அமைச்சின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய 'கசெற்' அறிவித்தல் ஒன்று சட்டமா அதிபர் திணைக்களத்தையும் புதுச்சட்டங்களின் வரைவுக்கான பொறுப்பைக் கொண்ட சட்ட வரைவாளர் திணைக்களத்தையும் முன்பு அவை இருந்த நீதி அமைச்சிடம் இருந்து அகற்றியது. புதிய பட்டியலிடப்படாத திணைக்களங்கள் என இத்திணைக்களங்கள் அரசியல் யாப்பின் 44 (2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் இப்போது வருவதோடு அவை நிறுவக ரீதியில் ஜனாதிபதிச் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக இப்போது தெரியவருகிறது.

355. இலங்கையின் கடந்த காலப்புலனாய்வுகள் மற்றும் வழக்காடல் பெரிதும் தேர்ந்தெடுக்கப் பட்டவையாகவும் சட்டத்தை அமுல் படுத்துவது தொடர்பில் அதிகாரத் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்டிருந்ததாகவே அன்றி நியாயமாகவும் சமமாகவும் நீதியைப் பெறுவதற்கானவையாக இருக்கவில்லை. தடுப்புக்காவலில் நேரும் மரணங்கள் காவல்துறையினருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்ற சட்டமா அதிபரின் தீர்மானம், நீதியை மறுப்பதாக அமையும் கொடுங்கோன்மையானது என ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் குழு தீர்மானம் ஒன்றை எடுக்கும் அளவிற்கு இருக்கிறது. அரச அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பற்றிய புலனாய்வுகள் அவை பூரணப்படுத்தப் பட்டிருந்தால் அவற்றுக்கு அசாதாரணமான நீண்ட காலம் சென்றுள்ளது. அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து காவல் துறையினர் அத்தகைய குற்றச்சாட்டுக்களை விடுக்கும் பாதிக்கப்பட்டோரை

## தமிழாக்கம் தொடர் 44

கிரமமாக அலைக்கழித்து வந்துள்ளனர். குற்றவியல் விசாரணைகளும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதும் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்கள் போன்ற அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை அலைக்கழிக்கவும் அச்சுறுத்தவும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)

# ஓய்வுபெற்ற யாழ்ப்பாண வ
# திருமதி அருளேஸ்வரி வே
# மணிவிழாச் சிறப்பு

## ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றும் திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் இன்று மணிவிழா காண்பதை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். செய்யும் பணியை தெய்வம் எனப் போற்றி யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை இன்றும் நெளி வடைந்து விடாமல் கல்வி சமூகத்தை தலை நிமிர்த்தி வைத்த பெருமை அம்மையாரை சாரும்.

அன்பும் அறிவும் அடக்கமும் செய்யும் பணியை செவ்வனே ஆற்றும் செயல்திறனும் எல்லோரையும் மகிழ்விக்கின்ற மனப்பாங்கு எளிமையான தோற்றம், இனிமையான பேச்சு அனைத்தையும் தன தாக்கி கொண்ட அம்மையாரின் பணி அனைவரையும் மகிழ்விக்கின்றது. பணிநிலையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் கல்விக்கும் சமூகத்திற்கும் உதவுவதற்கு இறையருளை பிரார்த்திக்கின்றோம். அம்மையாரின் பணிகளை பாராட்டி சிறப்புச் செய்யும் கல்விசார் சமூகத்தினரையும் ஏனையவர்களையும் வாழ்த்திப் பாராட்டு கின்றோம். திருமதி வேதநாயகம் என்றும் சிறப்புடன் வாழ இறையருளை பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,**
**ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்.**

## யாழ் ஆயரின் ஆசிச் செய்தி



யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர், திருமதி அருளேஸ்வரி வேத நாயகம் தமிழ் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பாக வடபிரதேச கல்வி அபிவிருத்திக்கு கிடைத்த பெருங்கொடையாகும். இறைபணி ஒரு மனிதனை ஆன்மீக வழியில் வழிப்படுத்த, கல்விப் பணி ஒரு மனிதனை அறிவியல் பாதையில் வழிப்படுத்துகிறது. பெரும் சவால்கள் நிறைந்த இப்பணியினை- கல்விப் பணியினை தனது முழுமனதுடன் மேற்கொண்டு மாசற்ற மாண்புயர் சேவையினால் அனைவர் மனங்க ளிலும் இடம்பிடித்த பெருமை இவருக்குண்டு.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் முதலாவது பெண் வலயக் கல்விப்பணிப்பாளராக முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தில் தனது பணியினை ஆரம்பித்த இவர் போர்ச் சூழ்நிலையிலும் துணிச் சலுடன் சேவையாற்றிய பெண்ணாக விளங்கினார். 2008 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக இன்று வரை சேவையாற்றினார். இவர் பல சந்தர்ப் பங்களில் தன்னை ஒரு பணிப்பாளராக அன்றி பணியாளராக கருதி சேவையாற்றி வந்தமையை பலரும் அறிவர்.

நாற்பது வருட காலம் கல்விப் பணிபுரிந்த எமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வி லும் ஓயாது நின்று நற்பணி தொடர அவரது சேவையை நன்றிப் பெருக்குடன் வாழ்த்தி இறை ஆசியும் வழங்கி நிற்கின்றேன்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். ஆயர்.**

## மௌலவியின் வாழ்த்துச் செய்தி



யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் தனது 60ஆவது வயதில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் இந்த சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண முஸ்லிம் சமூகம் சார்பாக ஆசியுரை வழங்குவதையிட்டு மகிழ்ச்சிடைகின்றேன்.


இஸ்லாம் மனிதர்களுக்கு நம்மை பயத்தல் என்ற கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்ட ஒரு மார்க்கம் கல்விச் செல்வத்தை மக்களுக்கு சீராக வழங்குகின்ற பணியிலே சிறப்பாக சேவையாற்றி இன்று தனது 60 ஆவது வயதிலே சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ளும் திருமதி வேதநாயகம் அவர்கள் மனித குலத்திற்கு அளப்பரிய நன்மையாற் றியவராகவே அடையாளப்படுத்தப்படுகின்றார்.

அம்மா வேதநாயகம் அவர்களை ஒரு சில சந்தர்ப்பங்களில் மாத்திரமே நான் சந்தித்தி ருக்கின்றேன். அச்சந்தர்ப்பங்களில் முஸ்லிம் மக்களுடைய கல்வி சார்ந்த பிரச்சினைகளை அவர் கையாளும் விதம், நேர்மையாக, நீதியாக நடந்துகொள்கின்ற தன்மை என்பன அவரது நிர்வாகத்தின் சிறப்பம்சமாகும்.

யுத்த காலங்களிலும், வடபகுதி மக்கள் சொல்லொணாத் துன்பங்களை சந்தித்தவேளை யிலும் அவர் இந்த மண்ணை விட்டு வெளியேறிச் செல்லாமல் மக்களோடு இணைந்து நின்று சேவையாற்றியமை எவ்வித காய்தல் உவத்தலுமின்றி பாராட்டப்படவேண்டியதே. வாழ்க பல்லாண்டு என நான் அவரை வாழ்த்துகின்றேன். இறைவனுடைய அருள் அவருக்கு உரித் தாகட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**மௌலவி அப்துல் அஸீஸ் (காஸிம்)**
**தலைவர்-உலமா அமைப்பு, யாழ்ப்பாணம்.**

## தருணம் பார்த்து கருத்தேற்றம் செய்யவல்ல கல்விப்பணிப்பாளர்



யாழ்ப்பாணம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் தனது பணியை மனநிறைவுடன் நிறைவேற் றித் தனது பேருழைப்பால் பெற்ற மகிழ்ச்சியுடன் ஓய்வு நிலைக்குச் செல்கின்றார். கல்விப் புலத்தில் வில்லேர் உழவனாக நின்று வற்றா முயற்சியுடனும் அயராத உழைப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணி செய் ததால் தொட்ட வினைதிறன்கள் எல்லாம் துலங்கும் விளை திறனாகப் பெறத்தக்க வகையில் கடமையாற்றியவர். அவரது சேவைக்காலத்தில் இயலுறு பிளவுகளால் பிணங்கிப் பிரிந்தவர்கள் கூட பணிப்பாளரின் அடல்செறிதுணிவுடன் செயற்பட்டதால் இணங்கி அடங்கி ஒத்துழைத்த வர்கள் பலர் என்பதை நான் அறிவேன்.

யாழ்ப்பாணத்தின் கணிதவள மூல நிலையத்தின் படைப்பாளியாக திகழ்ந்து பாடத்தினை அடைவுமட்டத்தை மேம்படுத்தி நன்நிலைப்படுத்தியவர். ஆசிரியர்களும் மாணவர்களும் மனம் நொந்து வருந்தி நலிந்து போகாமல் 'ங' ப்போல வளைந்து நயம்படவுரைத்து இசைவாக்கம் பெற வைத்து தருணம் பார்த்துக் கருத்தேற்றம் செய்வதில் வல்லவராக விளங் கியவர் என்றும் எளிமையும் தாயின் உள்ளத்தால் பொங்கியெழும் உணர்ச்சிகளை அடக்கி யும் விட்டுகொடாமலும் வீறுகொண்டு எழாமலும் நிர்வாக இயந்திரத்தை தெளிந்த நீரோ டையாக தெளிய வைத்து ஓய்வு நிலையை அடைகின்றார்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்ற தாயுமானவரின் உயர்ந்த உள்ளீடாக உள்ளடக்கித் தன்பெயருக்கேற்ப வழிப்படுத் திய அம்மையாரின் குணநலங்கள் வாழும் மக்களுக்குப் பரிணாமம் வளர்ச்சியாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வீ. கணேசராசா, அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, (மணிவிழாச் சபைத் தலைவர்)**

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்துச் செய்தி



எமது மண்ணில் தனது கல்வி ஆற்றலை உரிய முறையிலும் எமது மாணாக்கருக்குப் பயனுள்ள வகையிலும் வெளிப்படுத்தி அதனூடாக சிறந்த பணியினை முன்னெடுத்து பல்வேறு உயர் பதவிகளின் பின்னர் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி 02.06.2011இல் ஓய்வு பெற்றுள்ள திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் சேவை யைப் பாராட்டும் வகையில் வெளியிடப்படுகின்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குதை இட்டு பெரிதும் உவகையடைகின்றேன்.

1971ஆம் வருடம் தனது கல்விப் பணியினை ஆரம்பித்துள்ள திருமதி வேதநாயகம் அவர்கள், கணித, விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகவும் யாழ். மாவட்டத்தின் கணித, விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராக வும் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் பல்வேறு பதவி நிலைகளில் தனது சேவையை சிறப்பாக மேற்கொண்டுள்ளார்.

2000ஆம் வருடம் வடக்கு, கிழக்கு கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளராக இவர் பணியாற்றியுள்ளதுடன் 2005ஆம் வருடம் யாழ். தென்மராட்சி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். 2008ஆம் வருடம் முதல் ஓய்வுபெறும் வரையில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.

இவரது சேவைக் காலத்தில் எமது பகுதியின் கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவம் தொடர்பில் சிறந்த சேவைகளை இவர் ஆற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவரது சிறப்புகளை எடுத்துக் கூறும் இந்த மணி விழா நிகழ்வு சிறப்புற வாழ்த்துவதுடன் இவரது சேவைகளைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வு நிலைக் காலத்திலும் இவர் தன்னாலான பணிகளைத் தொடர்ந்தும் எமது சமுதாயத்திற்கு வழங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ., செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர், இணைத்தலைவர்- யாழ், கிளிநொச்சி தேர்தல் மாவ[illegible] ஒருங்கிணைப்புக் குழு.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக அளப்பரிய சேவை புரிந்து தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களுக்கு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி. அ.வேதநாயகம் அவர்கள் தனது கல்விப் பணியை 1971ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் ஆரம்பித்து பின்னர் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகராக கடமை ஆற்றியுள்ளார். 1987ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை யில் சித்தி எய்தி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் கோட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1998ஆம் ஆண்டு முதல் பெண் வலயக் கல்விப்பணிப்பாளராக துணுக்காய் வலயத்திற்கு நியமிக்கப்பட்டமை பெருமைக்குரிய அம்சமாகும். இதன் பின்னர் வடகிழக்கு மாகாணசபையில் பாடசாலைகள் அபிவிருத்தி சம்பந்தமான பிரிவில் பல உயர் பதவிகள் வகித்துள்ளார்.

இவரது கல்விச் சேவையை பாராட்டி லண்டன் பொதுநலவாய அமைப்பின் மகாநாட்டில் பாராட்டும், விருதும் வழங்கப்பட்டமை, 1993ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தால் அதிஉயர் கல்விச் சேவையாளர் விருதும் வழங்கப்பட்டுள்ளமை, மேலும் கோப்பாய் லயன் கழகத்தால் சிறந்த கல்வி நிர்வாக விருது வழங்கப்பட்டுள்ளமை போன்ற அம்சங்கள் இவரது அளப்பரிய சேவைக்குச் சான்றான அழியாத முத்திரைகளாகும்.

நான் கற்ற கல்லூரியான யாழ்/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலேயே இவரும் கல்வி கற்றவர் என்பதால் நான் பல மடங்கு மகிழ்ச்சியடைவதுடன் தனது 40 வருட ஆசிரிய சேவைக் காலத்தில் பல கல்விமான்களை உருவாக்கிய, போற்றப்படக்கூடிய பெண் சாதனையாளர் என்ற வகையில் பாராட்டி இவர் இறையாசி பெற்று மனநிம்மதியாக நீண்ட ஆயுளுடன் வாழ மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

**திருமதி இமெல்டா சுகுமார், அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர், யாழ் . மாவட்டம்.**

## மகத்துவம் மிக்க மகரஜோதி



மனித வாழ்வில் கல்வி என்பது மகத்துவமானது. உலகில் வாழும் மனிதர்களில் கல்வி கற்ற அறிவாளிகள் புலர் இருக்கின்றார்கள். அவர்க ளில் ஒரு சிலரே தான் கற்ற கல்வியின் அனுபவத்தால் மற்றவர் சமுதாய வாழ்வியலில் உயர வழிகாட்டும் வெளிச்சவீடுகளாய் அமைந்துவிடுகின்றனர்.

அந்த வகையிற்தான் கடந்த மூன்று வருடங்களாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு நிலை பெற்றுள்ள திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அம்மா அவர்கள் திகழ்ந்து வந்தி ருக்கின்றார். தனது வாழ்க்கையின் 60 ஆண்டுகளில் 40 ஆண்டுகளை உயரிய கல்விப் பணியிலும், அதனை வழிநடாத்தும் நிர்வாகப் பணியி லும் செலவிட்டு சிறந்தவராக விளங்கியிருக்கின்றார். வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதற்பெண் வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற பெருமையினை 1998.10.01 அன்று துணுக்காய் வலயத்தினைப் பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தியதன் மூலம் பெண் இனத்திற்கே பெருமை சேர்த்த மகத்துவம் மிக்க மகரஜோதி ஆகி நிற்கின்றார்.

யாழ். மாவட்டத்தின் ஐந்து முக்கிய கல்வி வலயங்களில் மிகப்பெரியகல்வி வலயமான யாழ். வலயத்தில் கடந்த மூன்று ஆண்டுகளிலும், தென்மராட்சிக் கல்வி வலயத்திலும் அவர் ஆற்றிய சேவையால் சமுதாயத்தின் சகல வடிநிலைகளிலும் வாழ்ந்த மக்களுக்கும், மாணவர்களுக்கும் நம்பிக்கை தரும் ஒளியாக விளங்கினார். அம்மா அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க ஆண்டவன் அருள் புரிய வேண்டி மணி விழா நிகழ்வை மனதார வாழ்த்துகின்றேன்.

**சி.மாணிக்கராசா,**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர், நல்லூர்**

## சேவையில் உயர்ந்த பெண்மணி

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் பிரதேசங்களின் கல்வி வளர்ச்சிக் காக மகத்தான சேவையாற்றியவர் எமது கல்விப் பணிப்பாளர் திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்.

கல்வி அபிவிருத்தி தொடர்பாக சதா சிந்தித்தவாறே இருப்பார். குறிப்பாக கிராமப்புற மாணவர்களின் கல்வி நலனுக்காக அயராது செயற்பட்டு இயலாமை என்று எதுவும் இல்லை என்பதை நிரூபித்த பெண்மணி. ஆசிரியர்கள் அனை வரையும் அன்பான வார்த்தைகளால் செயற்பட செய்யும் ஆற்றல் மிக்கவர். கல்வியில் இடர்படும் மாணவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அதீத கவனம் செலுத்தியதோடு நவீன கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டிற்கான ஆக்க மும், ஊக்கமும் வழங்கி வெற்றிகண்டவர். பணி ஓய்வு பெறும்போது கூட தமிழ் மொழித்திறன் முகாம் அமைத்து அதனூடாக கல்வி அபிவிருத்திக்கு பணியாற்றியவர். கல்வியில் மாணவர்கள் மேன்மையடையக்கூடிய அத்தனை செயற்திட்டங்களையும் திட்டுமிட்டு, கண்டிப் புடன் கூடிய கனிவான பேச்சு, செயல் ஊக்கம் என்பவற்றை பயன்படுத்தி தாம் மேற்கொள்ளும் திட்டத்தில் வெற்றிகண்டவர். இத்த கைய சிறப்புக்களையும் கொண்ட கல்விப்பணிப்பாளர் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புடனும் உடல்உள ஆரோக்கியத்துடனும் விளங்கவேண்டுமென இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ். வலய ஆசிரியர்கள் சார்பில் வ.சிவலீலாதேவி,**
**யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**



## கற்றவர் விரும்பு



ஆங்கோர்
"இன்னருங்
இனிய நீர்த்
[illegible] சத்தி
ஆ[illegible]யம் பதி

ஆகிய அனைத்திலும் பார்க்க " ஆசிரியப் பணியைத் தன் அர்ப்பணி பணியில் எடுத்தடி வைத்து இன்று 40 வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான உதவி அதிகாரியாகவும் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதல் வலய கல்விப் பணிப்பாளராகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய

இவர் லண்டன் பொதுநலவாய அமைப்பின் மகாநாட் பல்கலைக்கழகத்தின் அதியுயர் கல்விச் சேவையாளர் விருது பெற்ற கல்வியாளர்.

இத்துணை சிறப்பிக்குரிய புகழ்பூத்த கல்வியாளராக இ நிர்வாகத்தின் கீழுள்ள பணியாளர்களின் பிரச்சினைகளை தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று உழைத்து

மூன்று உயர் பதவிகளை பெண்களே வகித்த பெருமை ச ஒருவர் ஓய்வு பெறுவதால் ஒரு பதவி வெற்றிடமாகப் போனது

பழகுவதற்கு இனியவரும், பண்பிலே உயர்ந்தவருமா துறைக்கு ஓர் இழப்பு என்றே கூறவேண்டும். அன்னாரது அடிச் துறையை வளர்த்தெடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

பெண் இனத்திற்கு பெருமைதேடித்தந்த இவர் தனது தேகநலத்துடனும், மற்றையோர்க்கு உதவும் மனப்பான்ன திக்கின்றேன்.

**திருமதி யோ.**
**மாநகர முதல்வ**

## பண்புடைமையி



திருமதி அ.வேதநாயகம் அவர்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியராக, வலயக் கல்விப் பணிப்பாளராக சே ஆரம்பித்து வலயக் கல்விப் பணிப் அவர்கள் இவ்விரு பதவிகளுக்கும் இ ரையினைப் பதித்துக் கொண்டார்.

இலங்கை கல்வி நிர்வாகச்சேவையி பதவியணியில் தனது கடமைப் பொறு கணித மூல வள நிலையம் என்ற வேதநாயகம் அவர்கள்.கணித்பாட சித் நிலையில் விசேட செயற்றிட்டங்களுடனும், கணிதவள நிலை உயர் கல்விச் செயற்பாடுகளுக்கு வழி சமைத்துக் கொடுத்த யில்லை.


கிராமப்புறப்பாடசாலைகளை, நகர்ப்புறப் பாடசாலை நோக்கில் செயற்பட்டு அதனை செய்து காட்டிய பெருமை அ மாணவர்களது காலைச் செயற்பாடுகளை அவதானித்த ம செய்யலாம் என்பதிலும் மிகுந்த நம்பிக்கையுடன் செயற்பட்

"எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார் மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு"

எவரிடத்தும் எளிதாக நட்புக் கொண்டு இனிதாகக் கல என்கிறார் வள்ளுவர். இதனைத் தனது தாரக மந்திரமாகக் அணிகலனாய் விளங்கும் திருமதி அ.வேதநாயகம் அவர்கள்

**யோ.ரவீந்திரன், பதில் கல்விப் ப**

# வலயக்கல்விப் பணிப்பாளர்
# வேதநாயகம் அவர்களின்
# ...பு மலர்-15.06.2011



## Message From The Honourable Governor



I am pleased to convey this message to the souvenir of Diamond Jubilee which is celebrated for Mrs.Aruleswary Vethanayagam, Director of zonal Education, Jaffna who is going to retire from the service.

Only education has ways and means to reach the top of the career ladder, so it is identified as a precious assert for the human being.This fact is always realized by everyone. Mrs.Aruleswary Vethanayagam has got a privilege by serving in education field for fourty years. I think that she was able to do a lot for the society by her dedicated service in the education field. I came to know that she is an efficient administrator with her own approaches and ways of solving problems.she got the opportunity as a Director to enhance educations as well as administration.

While I wish her good health and happiness in her retirement, I am confident that our society will make use of her services further in some other capacity.

**G.A.Chandrasiri, Governor,**
**Nothern Province.**

## கல்வியமைச்சின் செயலாளரின் வாழ்த்து



திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி 2011.06.03 ஆம் திகதியில் தமது அறுபது அகவையைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறுகின்றார்.

இவர் யாழ். வலயம் 2இல் உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்த போது கணித அபிவிருத்திக்கான பலசெயற்றிட்டங்களை முன்னெடுத்து வெற்றிகண்டார். அவரது பெறுமதிவாய்ந்த உழைப்பிற்கு கோப்பாய் கணித வள நிலையம் சான்றாக இருந்தது.

இடம்பெயர்வின் பின் வன்னி சென்று 1996ஆம் ஆண்டு துணுக்காய் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து 1998இல் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு உயர்வடைந்து அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் முதலாவது பெண் வலயக்கல்விப்பணிப்பாளர் என்ற பெருமையையும் கொண்டுள்ளார். 2000 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருந்ததுடன் முன்பள்ளிகளின் அபிவிருத்திக்கும் பொறுப்பானவராகச் செயற்பட்டு 2005ஆம் ஆண்டில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்தபோது அங்கு யுத்தம் காரணமாக நடைபெற்ற இடக்குலைப்பின் காரணமாக பாடசாலைகள் ஒழுங்காகச் செயற்படமுடியாமல் போயின மாணவர்களின் கல்வியைத் தொடர்வதற்கான உத்திகளை உருவாக்கி "வீட்டில் கற்றல்" மேற்கொள்வதற்கான கற்றல் கையேடுகள், ஆசிரியர் பங்களிப்பு ஆகியவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியவர். யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக 2008இல் கடமையேற்று பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தல் பொறிமுறையை மேம்படுத்த அரும்பாடுபட்டவர்.

இவரது கல்விப்பணி, ஈடுபாடு ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும் வகையில் 1994/1995 ஆண்டு நடைபெற்ற லண்டன் பொதுநலவாய அமைப்பு மகாநாட்டில் விருதும் பாராட்டும் பெற்றதுடன் 1993இல் யாழ். பல்கலைக்கழகத்தால் அதியுயர் கல்விச் சேவையாளர் விருதும் கோப்பாய் லயன் கழகத்தால் சிறந்த நிர்வாகி விருதையும் பெற்று கல்விக்கு இவர் ஆற்றிய, ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியன. இவரது வழிகாட்டல் கல்விச் சமூகத்திற்கு இன்னும் தேவைப்படுகின்றது. பல்லாண்டு காலம் வாழ்ந்து பணி தொடர எனது மனமுவந்த வாழ்த்துக்கூட.

**இ.இளங்கோவன், செயலாளர், கல்வி பண்பாட்டு அலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்.**

## கல்விக் கலசமாய் திகழ்ந்தவர்



திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக கல்விப் பணியாற்றியிருப்பது அளப்பரிய அர்ப்பணிப்பேயாகும்.

1971ஆம் ஆண்டு முதல் ஆசிரிய சேவையில் ஆரம்பித்து கல்வியிற் பல பட்டங்கள் பெற்று, பரிசுகள் பெற்று, தமிழுலகில் கல்வித் துறையில் பதவிகள் பல வகித்து இறுதியில் யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றித் சான்றோர் நிலையெய்தியிருக்கும் பேராளர் பெண்ணிற்கும் தமிழ் உலகிற்கும் பெருமை சேர்த்துள்ளார் அருளேஸ்வரி அவர்கள்.

தமிழ் மொழி பேசும் மக்கள் பட்டபாடுகள் பேரழிவுகள் எண்ணற்று நிற்பினும் கல்விச் செல்வத்தை இழந்து விடாமல் தமிழின அடையாளத்தை அழிய விடாமல் தம்முயிரையே கொடுத்தும் தம் அறிவையும் ஆற்றலை யும் தமிழ்மொழி இனம் மாட்சிமை பெறக் கல்விச் சமூகம், ஆசிரியர் குழாம் பெருந் தியாகங்களைச் செய்துள்ளமை வரலாற்றில் பதியப்பட்டதொன்றாகும்.

இந்த அத்திபாலத்தில் நின்று கல்விக் கலசமாய் கோபுரத்தின் உச்சியில் உயர்ந்து நிற்கும் பெண்ணிற் பெருந்தகை அருளேஸ்வரியைப் பாராட்டி, வாழ்த்திப் பெருமைப்பட்டு நிற்கின்றோம். வாழ்க இன்னும் வள்முடன்.

**மாவை .சோ.சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர்.**

## பணி நயப்பு வாழ்த்துரை



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றா மை நன்று"

என்ற வள்ளுவர் வாக் கிற்கிணங்க திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம் அவர் கள் தனது தற்போதைய அகவையில் மூன்றில் இரண்டு பங்கினை மாணவர்களின் கல்வி வளர்ச் சிக்கு அர்ப்பணித்து தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறுகின்றார். இவர் எமது பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டி கல்வியின் மகத்துவத்தை, ஏழைச்சிறார்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் தனது அயராத உழை ப்பினால் பாமரமக்களின் உள்ளத்திலும் இடம் பிடித் துள்ளார் என்றால் அது மிகையாகாது.

"இயல்வது கரவேல்" என்ற வாசகத்தை தாரக மந்திரமாகக் கொண்டு தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து கல்வித்துறை சார் உத்தியோகத்தர்கள் அனைவரையும் அரவணைத்து, வருங்கால சந்ததியினர் நற்பிரஜைகளாக மிளிர இரவு பகல் பாராமல் தனது கடமைகளைச்செய்து வெற்றிபெற வீறுநடை போட்ட பணிப்பாளராவார். இவரது சேவை என்றும் போற்றப்படும். இவரது ஓய்வுக் காலத்தில் குடும்பத்துடன் உடல் உள ஆரோக்கியத்துடன் வாழ இறைவன் அருள் புரிவாராக! இவர் இதுவரை ஆற்றிய கல்விப் பணிக்காக மாகாணக் கல்வித் திணைக்களம் நன்றி கூறுகிறது.

**ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்.**

## ...யும் கல்வி அதிகாரி

...கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்-
...ன்னருங் கனி சோலைகள் செய்தல்
...ிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
...ா சத்திரம் ...ரம் வைத்தல்
...யம் பதினாயிரம் நாட்டல்"

...பார்க்க "புண்ணியம் ஒரு கோடி" என்ற பாரதி வாக்குக்கமைய ...ர்ப்பணிப்புப் பணியாகக் கொண்டு 1971ஆம் ஆண்டு ஆசிரியப் ...ன்று 40 ஆண்டு கல்விச் சேவையின் பின் ஓய்வுபெறும் யாழ். ...ருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் ஆசிரிய சேவையில், ...ன உதவிக்கல்விப் பணிப்பாளராகவும், துணுக்காய் கோட்டக்கல்வி ...ல் வலய உதவிக் கல்விப்பணிப்பாளராகவும், தென்மராட்சி வலயக் ...ாற்றிய பெருமைக்கு உரியவர்.

...கோநாட்டில் விருதும் பாராட்டும் பெற்றுதுடன் 1993 இல் யாழ். ...ர் விருதும், கோப்பாய் லயன் கழகத்தின் சிறந்த நிர்வாகி விருதும் ...

...ளராக இவர் இருந்தபோதிலும் பெருமை சிறிதும் இன்றி தனது ...னைகளைத் தன் பிரச்சினையாகக் கொண்டு அவற்றிற்கான ...ழைத்து வந்தார் என்பது பெருமைக்குரிய விடயம்.

...ருமை சமீபகாலத்தில் யாழ். நகருக்கு இருந்தது. இன்று அவர்களில் ...போனது வருத்தத்துக்குரியது.

...வருமாகிய திருமதி.அ.வேதநாயகம் அவர்களது ஓய்வு கல்வித் ...து அடிச்சுவட்டைப்பின்பற்றி இனிவரும் உயர் அதிகாரிகள் கல்வித் ...றன்.

...ர் தனது ஓய்வுக் காலத்தை நீண்ட மகிழ்ச்சியுடனும், நிகரற்ற ...பான்மையுடனும் மேற்கொள்ள இறையாசி வேண்டிப் பிரார்த் ...

**...தி யோ.பற்குணராசா ,**
**...முதல்வர், யாழ்ப்பாணம்.**

## துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி



பல வருடகால கல்விச் சேவையில் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி அ.வேதநாயகம் அவர்களைப் பாராட்டி அவரைப்பற்றி சில வரிகள் எழுதக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1971ஆம் ஆண்டு ஆரம்பித்த அவரது ஆசிரியப்பணி ஆசிரிய ஆலோசகராக முதலாவது பெண் கோட்டக் கல்வி அதிகாரியாகவும் பின்னர் மென்மேலும் பதவி உயர்வு பெற்று தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளராகவும் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராகவும் மிளிரவைத்தது.

அவர் யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளராக இருந்து செய்த சேவை அளப்பரியது. இவை தவிர இவர் பல வகையான விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றவர். இன்றைய காலகட்டத்தில் ஒரு பெண் இத்தகைய உயர்நிலையில் இருந்து விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றமை அனைத்துப் பெண்களையும் பெருமிதமடையச் செய்வதுடன் எனக்கும் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. அவர் மேலும் பாராட்டுக்களையும் விருதுகளையும் பெறுவதுடன் நிறைவான வாழ்க்கையை வாழ இறைவனை வணங்கி நிற்கின்றேன்.

**பேராசிரியர், வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.**

## கணித எண்ணக்கருவின் கருவறை



திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் கடந்த 24 வருடங்களாக இலங்கைக் கல்வி நிர்வாக சேவை பொது ஆளணியில் உயர்புள்ளி பெற்றுத் தெரிவு செய்யப்பட்டவர். இருப்பினும் தான் கற்ற கல்வியான கணித பாடத்தினை இக்கல்விச் சமூகமும் பெற வேண்டும் என்ற நோக்குடன் அயராது உழைத்து வெற்றியும் கண்டவர். இவர் காலத்திலேயே யாழ்ப்பாண மாவட்டத்தில் கணித மூல வள நிலையங்கள் உருவாக்கப்பட்டன.

இம்மூல வள நிலையமூடாக கணித எண்ணக்கருக்களை இலகுவாக மாணவர்கள் கற்றுச் சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றுக் க.பொ.த உயர்தர வகுப்பு அனுமதி பெற்றுக் கற்று பல்கலைக்கழகம் வரை கற்கக்கூடியதாக இருந்தது.போக்குவரத்து வசதிகளற்ற அக்காலத்தில் துவிச்சக்கரவண்டியில் நீண்ட பயணம் செய்து பின்தங்கிய பகுதியான மருதங்கேணி மாணவர்கள் கணித மேம்பாடடைய வைத்துள்ளார். அதுமட்டுமல்லாது கஷ்டமான சூழ்நிலையுள்ள நேரத்திலும் துணுக்காய் கல்விக் கோட்டம், துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம் என்பனவற்றிற் கடமையாற்றி அல்லும் பகலும் உழைத்து அம்மாணவர்களைக் கல்வியில் மேம்பாடடைய வைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கணித பாடம் மட்டுமல்லாது ஆரம்ப பிள்ளை அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தி வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளை ஒருகவின் நிலைக்கு கொண்டு வந்தார். கல்விக் கழகு கசடற மொழிதல் என்னும் முதுமொழிக்கிணங்க கடமையாற்றி கல்விச் சேவையில் உயர்ந்துள்ளார். கல்விச் சேவையில் தனது வாழ்வாகக் கருதி உழைத்த கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கல்விக்கு தொடர்ந்தும் தொண்டாற்றுவதுடன் உடல், உள சுகங்களுடன் வாழ எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**வே. தி. செல்வரத்தினம், பிரதிச் செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடமாகாணம்.**

## ...யின் அணிகலன்

...அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு ...ியராக,முதன்மையாசிரியராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, ...ாக சேவையாற்றி ஆசிரியராக தனது கல்விச் சேவையினை ... பணிப்பாளராக தனது கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெறும் ...கும் இடையிலான சகலமட்ட பதவி நிலைகளிலும் தனது முத்தி ...ார்.

...சேவையின் பொதுப் பதவியணிக்கு தெரிவு செய்யப்பட்டபோதும் விசேட ... பொறுப்புக்களை ஏற்று மிகவும் சிறப்பாகப் பணி யாற்றியவர். ...ன்ற எண்ணக் கருவினை எம்மிடையே ஊட்டி யவர் திருமதி ...ட சித்தி பல மாணவர்களது உயர்கல்விக்குத் தடையாக இருந்த ...ா நிலையங்களூடாகவும் அத்தடையினை நீக்க மாணவர்களது ...டுத்தவர் திருமதி வேதநாயகம் அவர்கள் என்றால் அதுமிகை ...

...லைகளுக்கு நிகராக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என்ற ...ம அவருக்கே சாரும். நாளாந்தம் பாடசாலைத் தரிசிப்பு செய்து ...ந்த மகிழ்ச்சியுடன் அலுவலக கடமைகளை புத்துணர்ச்சியுடன் ...ற்பட்டவர் திருமதி வேதநாயகம் அவர்கள்.

...் கலந்துரையாடுதல் பண்புடைமை என்ற நடத்தையைத் தரும் ...ாகக் கொண்டு செயற்பட்டு வள்ளுவன் தந்த பண்புடைமைக்கு ...வர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

**...விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்.**

## மனிதநேயம் மிக்கவர்



வடகிழக்கு மாகாணக் கல்விப்புலத்தில் பல்வேறு பதவி நிலைகளை அலங்கரித்து கடந்த நான்கு தசாப்தங்களாக கல்வி விருத்திக்காக தன்னை அர்ப்பணித்து பணியிலிருந்து இளைப்பாறிய வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்களின் மணிவிழா நயப்பு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஆளுமையும், ஆற்றலும், மனிதநேயமிக்க அம்மையாரின் கீழ் யாழ். கோட்டக்கல்வி அதிகாரியாக பணியாற்ற எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி பெருமிதமடைகின்றேன்.

தன் வாழ்வாலும், பணியாலும், தெளிவான சிந்தனையாலும், இறைநம்பிக்கையாலும் பிறருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து தேவையுள்ள மாணவர், பாடசாலைகள் மீது அதிக கரிசனை செலுத்தி பரீட்சைப்பேறுகள், இணைபாடவிதான செயற்பாடுகள், ஆசிரியர் நலன்நோம்பு விடயங்கள் யாவற்றிலும் எம் வலயம் மேன்மையுறவைத்தவர். தன்கீழ் பணியாற்றிய யாவருடனும் நலலுறவைப் பேணி நற்சேவையாற்றிய திருமதி. அ.வேதநாயகம் அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்கவும், அவர் குடும்பம் இறை ஆசிகளை நிறைவாகப் பெறவும் இத்தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி வ.சிவபாலன், கோட்டக் கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்.**

## கல்வி அபிவிருத்தியே கண்ணானவர்



ஒவ்வொரு மாணவனினதும் இயல்பையும் தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு ஏற்ற கற்றற் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என ஆசிரியர்களையும் அதிபர்களையும் தூண்டி யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர் இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்.

அவரது அரும் முயற்சிகள் எமது வலயத்திலும் கோட்டத்திலும் நல்ல பெறுபேறுகளைத் தந்தன என்பதில் சந்தேகமில்லை. கோப்பாய் கோட்டப் பாடசாலைகள் மீது அவர் விசேட அக்கறை செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. பாரபட்சமற்ற சேவை, வெளிப்படையான செயற்பாடுகள் அவரது முகாமைத்துவத்தில் குறிப்பிட்டுக் கூறப்படக்கூடிய அம்சமாகும்.

கொடை வள்ளல்களையும் சமூகசேவைகளையும் இனங்கண்டு அவர்களின் உதவியுடன் அவர் முன்னெடுத்த ஆங்கில, கணித அபிவிருத்தி செயற்திட்டங்கள் அவரது ஆளுமைக்குச் சான்றுபகர்வன. எங்கெல்லாம் நல்ல அம்சங்கள் அவரது ஆளுமைக்குச் சான்றுபகர்வன. எங்கெல்லாம் நல்ல அம்சங்கள் காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் எமது மாணவர்கள்பெற்று விட வேண்டும் எனத் துடிப்புடன் செயற்பட்ட திருமதி. அ.வேதநாகம் அவர்களின் மணிவிழா சிறக்கவும் ஓய்வுக் காலத்தில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழவும் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**வே.பாலசுப்பிரமணியம்.**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,கோப்பாய்.**

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 23

"இன்றைக்குப்பெரும்பாலும், கடவுள் நம்பிக்கை இல்லாத இளைஞர்களைத் தான் பார்க்கமுடிகிறது. ஆனால், மதங்களின் பெயரால் நடக்கும் தீவிரவாதத் தாக்குதல்களில் இளைஞர்கள்தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். எதனால் இந்த முரண்பாடு?"

இளைஞர்கள் கடவுளை நம்பவில்லை என்று யார்சொன்னது? முந்தின தலைமுறையின் அதே சடங்குகளை அவர்கள் பின்பற்றவில்லை என்பதால், அப்படிச் சொல்லமுடியாது.

இளைஞர்கள் கடவுளையோ , ஏதோ ஒரு கொள்கையையோ மூடத்தனமாக நம்புவதால்தான் அவர்கள் வன்முறைத் தீவிரங்களில் ஈடுபடுகிறார்கள்.

"அப்படியானால் அன்மீகத்தால் தீவிரவாதம் பெருகிவிட்டது என்பது தானே உண்மை?"

மதநம்பிக்கை வேறு;ஆன்மீகம் வேறு. முதலில் அதைப்புரிந்து கொள்ளுங்கள்.

ஒரு மதத்தைச்சேர்ந்தவர் என்று சொன்னதுமே, நீங்கள் நம்பிக்கைவாதியாகிவிடுகிறீர்கள். இயேசு சொன்னாரோ, இராமன் சொன்னாரோ, நபிகள்சொன்னாரோ... அதை எதற்காக நீங்கள் அப்படியே நம்ப வேண்டும்? ஆன்மீகம் என்பது வேறு. அது நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைவதில்லை. அது நாடுதல், தேடுதல் என்று வேறு மனநிலையில் நிகழ்வது. தனக்குத் தெரியவில்லையென்று தைரியமாக ஒப்புக்கொண்டு, அதைக்கண்டுபிடிக்க முனைவது ஆன்மீகம். ஒரு குரு, மரணப்படுக்கையில் இருந்தார் பல சீடர்கள் அவரைச்சுற்றி அமர்ந்திருந்தனர்.

குருவைக்காண ஓர் இளைஞன் வந்தான். பல வருடங்களுக்கு முன், அவருடைய கருத்துக்களை ஏற்க மறுத்துப் பிரிந்து சென்ற சீடன் அவன். அவர் தாள் பணிந்தான்.

"நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான் என்று அறிந்துகொண்டேன் குருவே" என்றான்.

"என்னிடம் உள்ள சில அரிய இரகசியங்களை சொல்லித்தர உனக்காகத்தான் காத்திருக்கிறேன்." என்றார் குரு.

மற்ற சீடர்கள் அதிர்ந்தனர். "உங்களிடம் கடைசிவரை விசுவாசமாக இருந்த எங்களை விட, விட்டுப்போன சீடர்தான் முக்கியமானவனாகிவிட்டானா?" என்றனர்.

குரு சொன்னார், "நீங்கள் என்னை நம்பினீர்களேதவிர உங்களை நம்பவில்லை. அவன்தான் தன்னை நம்பி தேடுதலுடன் போனான். அவன்தான் என் உண்மையான சீடன்!"

## பரிசீலனை செய்யுங்கள்...!

அதேதான் நானும் சொல்கிறேன்.

கடவுளின் புதல்வர்களோ, கடவுளின் தூதுவர்களோ ஏன் கடவுளே சொன்னாலும் சரி... அதை நீங்கள் பரிசீலிக்காமல் , கண்மூடித்தனமாக நம்பிப் பயணம்செய்தால் என்ன ஆகும்?

உங்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட நம்பிக்கைகளைக்கொண்டவர் எதிர்ப்பட்டால், இரண்டு நம்பிக்கைகளும் மோதும். உங்களை எதிரிகளாக்கிவிடும்.

எப்போது உங்களிடம் தேடுதல் இல்லாமல் போய்விட்டதோ, அப்போதே ஆன்மீகப்பாதையில் செல்வதாகச் சொல்லிக் கொள்ளும் தகுதியை இழந்து விடுகிறீர்கள். உங்கள் மதம் அமைத்துக் கொடுத்த நம்பிக்கைகளின் பேரில் கேள்வி கேட்காமால் நீங்கள் செயற்படும் போது, உங்களை உணர்ச்சி வசப்பட வைப்பது சுலபமாகிவிடுகிறது. உங்கள் கடவுளின் பெயரைச்சொல்லி வன்முறை, தீவிரவாதம் என எதில் வேண்டுமானாலும் உங்களைத் திசைதிருப்ப முடிகிறது.

புதிய தம்பதியர் தேன் நிலவுக்கு ஊட்டி வந்திருந்தார்கள். அவர்களைச்சுமந்து சென்ற குதிரை தடுமாறியது. 'ஒரு முறை' என்றான் கணவன்.

சிறிது நேரத்தில் குதிரை மீண்டும் தடுமாறியது. சட்டென்று துப்பாக்கியை எடுத்துக் குதிரையைச் சுட்டுவிட்டான் கணவன்.

புதுமனைவி மிரண்டு போனாள். "எதற்காக் குதிரையைச் சுட்டீர்கள்?" என்று கத்தினாள்.

'ஒரு முறை' என்றான் கணவன். அவளை நோக்கித்துப்பாக்கியைத் திருப்பியபடி.

மதவாதிகள் இப்படித்தான்... அவர்கள் நம்பிக்கைக்கு எதிராக இருப்பவர்களுக்கு அந்த 'ஒருமுறை' கூட தரத்தயாராக இல்லாதவர்கள். ஆன்மீகப்பாதையில் போகிறவர்கள் அப்படியல்ல. உண்டு, இல்லை என எந்த முடிவுக்கும் வராமல் உண்மையை அறிந்து கொள்ள பிரியப்படுபவர்கள்.

அவர்கள் மற்றவர்களை சரியானவர்கள் என்றோ, தப்பானவர்கள் என்றோ எதை வைத்து முடிவு செய்வார்கள். மாட்டார்கள் இல்லையா...?

அப்புறம் எதற்காக அவர்கள் வன்முறைகளில் ஈடுபடும் தீவிர வாதிகளாக மாறப் போகிறார்கள்?

**"ஆனால், மற்றவர்கள் சொல்வதை நம்புகிறவர்கள் எல்லோருமே தீவிரவாதிகள் ஆகிவிடுவதில்லையே?"**

தீவிரமாக நம்புவது என்பதை அடிப்படையாகக்கொண்டு செயல்படுபவர்கள் எல்லோருமே தீவிரவாதிகள்தாம் அதற்காகத் தங்கள் உயிரைக்கொடுக்கவும் தயாராக இருப்பார்கள். கடவுள் இருக்கிறார் என்று தீவிரமாக நம்பியவர்களும், இல்லை யென்று தீவிரமாக நம்பியவர்களும் தங்கள் நம்பிக்கையை நிலைநாட்ட தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல்தான் செயற்பட்டார்கள்.

நீங்கள் தீவிரவாதி இல்லையென்றால், உங்கள் நம்பிக்கை முழுமையாக இல்லை யென்று அர்த்தம். உங்களுக்கு வசதியென்றால் ஒன்றை நம்புவீர்கள். அதுவே உங்களுக்கு அசௌகரியமாக இருந்தால் மறுப்பீர்கள். கேட்டால், உங்களை மிதவாதி என்பீர்கள். உண்மையில் நீங்கள் மிதவாதியல்ல ; சந்தர்ப்பவாதி!

**"இளைஞர்களுக்கு என்னதான் சொல்கிறீர்கள்?"**

பெற்றோர் மட்டுமல்ல... யார் சொன்னாலும், அதை மூடத்தனமாக நம்பாமல் நீங்களாகச்சிந்தித்து செயலாற்றும்வரைதான் நீங்கள் இளமையுடன் செயலாற்ற முடியும். எந்த நம்பிக்கையின் அடிப்படையிலும் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், எதையும் அனுபவரீதியாக பரிசீலனை செய்யுங்கள்.

இப்போது நீங்கள் இருக்குமிடம், பயணப் பாதையின் ஆரம்பமாக இருக்கலாம். அல்லது நீங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு இன்னும் ஓர் அடி எடுத்து வைத்தாலே போதுமானதாக இருக்கலாம். ஆனால், எங்கு நிற்கிறோம் என்பதே தெரியாமல் யாரோ சொன்னதற்காக நேரெதிர்த்திசையில் பயணம் செய்ய ஆரம்பித்தால் எப்போது எங்கே போய்ச்சேர்வீர்கள்?

நம்பிக்கைகளால் உங்கள் புத்திசாலித்தனம் களங்கப்படாமல், சிக்கலாகாமல் இருந்தால் ஆன்மீகம் உங்களுக்குக் கைகூடும்.

உண்மையான ஆன்மீகம் வன்முறைகளை ஒருபோதும் ஆதரிக்காது. விஷம் விலகி அமுதூட்டும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கியப்படைப்பு படைப்பாளியின் பிம்பத்தை உணர்த்துமா? 03

இப்போது நமக்கு உலகெங்கும் பரந்த ஒரு தமிழ்ச்சூழல் வாய்த்திருக்கிறது. பல தேசங்களிலிருந்து நமக்கிடையே உறவுகளும் பரிவர்த்தனைகளும் ஏற்பட வசதியான தொடர்பு வாய்ப்புக்கள் இப்போது அதிகரித்திருக்கின்றன. ஒரு நாட்டின் மூலையில் கம்பளிக்கோட்டுக்குள் தன்னை மறைத்துக்கொண்டு வீதிகளில் பனிக்கட்டிகளை கூட்டிப் பெருக்கும் ஒருவனும் இன்னொரு நாட்டில் வியர்வை சொட்டச்சொட்ட தொழிற்சாலையின் இருண்ட மூலையில் வெல்டிங் செய்து கொண்டிருக்கும் இன்னொருவனும் உறவினர்களாக இருக்க வாய்ப்பிருக்கிறது. சம்பாஷித்துக்கொள்ள முடிகிறது... நமக்கு பரிச்சயமான முகமும் மொழியும் இன்று உலகெங்கும் காணக்கிடைக்கிறது. இது இந்த யுகத்தில் நமக்கு வாய்த்த நல்ல அதிஷ்டமாக நாம் சிந்திக்கத் தொடங்க வேண்டும்.

அவரவர்களுக்கு வாய்த்த இந்த அன்னியமான வாழ்வுச்சூழல்களில் மானிடத்தின் சில பொதுவான அடையாளங்களைக்கண்டறிந்து ஒரு புதிய படைப்புலகத்தை இலக்கியமாக வடிவாக்க ஊக்கம் கொள்ள வேண்டும். நமது பாரம்பரிய குரல்களும் ஞாபகங்களும் நம்முடைய பிரச்சினைகளிலிருந்து அழிந்து போகக்கூடிய தன்மைகொண்டதல்ல. எந்தச் சூழ்நிலையில் நாம் எழுத முற்பட்டாலும்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

நமது பின் புலங்களின் சாயல்கள் அங்கே நிழல்போலத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும்.

உதாரணமாக சங்ககாலம்தொட்டு இன்றுவரை நமது சமுதாயம் ஏராளமான மாற்றங்களையும் கலாசாரப் பாதிப்புக்களையும் ஏற்றுக் கொண்டுதான் வளர்ந்திருக்கிறது. நமது இலக்கியங்களும் அந்த மாற்றங்களை சுவீகரித்துக்கொண்டு ஒவ்வொரு காலகட்டத்திலும் தன்னை தன் செட்டையுரித்துக்கொண்டு அர்த்தமுள்ள புதிய வடிவங்களில் தோன்றிக் கொண்டுதான் இருக்கின்றன.

பொதுவாக நெடுங்காலமாக நமது மொழி, நமது மண் என்று உரிமைகளில் பெருமைப்பட்டுக்கொண்டிருந்த நமக்கு இன்றைய புதிய தேசங்களும் சூழ்நிலைகளும் நமது பிரக்ஞையில் ஆற்றமுடியாத ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடும். அது வருந்தத்தக்க நிலைமைதான்.

ஆனால், தீர்வுகாண முடியாத ஒரு விடயமல்ல.

உண்மையில் தமிழ்மொழியின் உலகளாவிய வளர்ச்சிக்கு வாய்த்த ஒரு நல்ல சந்தர்ப்பமாக நாம் இதை மாற்றி கொள்ளமுடியும். தமிழ் மொழியை அதன் சாரமிழந்த அரசியல் கோசங்களிலிருந்து மீட்டெடுத்து உலக சிந்தனைகளின் செழுமையை வலிமையை தமிழுக்குக் கொண்டுவந்து வளம் சேர்ப்பது தான் நாம் இன்று செய்ய வேண்டிய அவசியமான அவசரமான காரியம்.

தமிழ்மொழியை சுயலாப நோக்கின் சார்பிலிருந்து, தற்பெருமைகளிலிருந்து மீட்டெடுத்து அதை ஒரு உயிர்ப்புள்ள ஊடகமாக மாற்றுவது இப்போது எழுத்தாளர்களின் முக்கியமான கடமை

**வைத்தீஸ்வரன்-தமிழ்நாடு**

என்று கருதுகிறேன். இலக்கியத்துக்குப் புறம்பான காரணங்களுக்காக இன்னொரு மொழியை துவேசித்து வெறுப்பதும் அதை நிராகரிப்பதும் ஒரு எழுத்தாளன் தவிர்க்க வேண்டிய அபாயம்.

(தொடரும்)

# இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் 39 சதவீதத்தால் அதிகரிப்பு

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பதிவுகளின் அடிப்படையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் மே மாதத்தில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை 39 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இப்பதிவுகளின்படி கடந்த ஆண்டு மே மாதம் 35 ஆயிரத்து 213 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ள அதேவேளை இவ்வருடம் மே மாதம் இவ் எண்ணிக்கை 48 ஆயிரத்து 943 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் கடந்த வருடம் 2 இலட்சத்து 33 ஆயிரத்து 922 ஆக இருந்த சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை ஐந்து மாதத்தினுள் 3இலட்சத்து 27 ஆயிரத்து 902 ஆக உயர்வடைந்துள்ளது.

அதிகார சபையின் தகவலின்படி கடந்த ஆண்டு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து இங்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 37.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இவ் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 367 எட்டியுள்ளது.

தெற்காசிய பிராந்தியங்களில் இருந்து வருகை தந்தவர்களின் எண்ணிக்கை 50.9 சதவீதத்தை அடைந்துள்ளதுடன் இவ் எண்ணிக்கை 98 ஆயிரத்து 139 யும் எட்டியுள்ளது.

இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்களின் எண்ணிக்கை 68ஆயிரத்து 830 ஆக உயர்ந்துள்ளது.

இவ்வருடம் வருகை தரும் சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கையை 7 இலட்சமாக உயர்த்தவும் 2016 இல் 20.5 மில்லியன் ஆக உயர்த்தவும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. (ஸ்ரீ-2)

# உயர்நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சத்தியா ஹெட்டிகே மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ ஜே. டெப் ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இதுதொடர்பான வைபவம் நேற்று முன்தினம் காலை அலரிமாளிகையில் நடைபெற்றது. இதில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டார். (ஸ்ரீ-2)

# அரசுக்கு எதிராக சூழ்ச்சி செய்ததாக நான்கு பல்கலை. மாணவர்கள் கைது

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில்நான்குபல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகவும் அதில் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டதாகவும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மிரிஹான பொலிஸாரால் குறித்த மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடும் உரிமை பறிக்கப்பட்டுள்ளதாகவும் போலியான குற்றச்சாட்டுக்களின் அடிப் படையில் மாணவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை, பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் என்.எல்.ஏ. கருணாரட்ண தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 'கடலெல்லை சுட்டிக்காட்டி கருவி' இந்திய மாணவர்கள் சாதனை

இலங்கை எல்லைக்குள் சட்ட விரோதமாக பிரவேசிப்பதாக கூறப்படும் இந்திய மீனவர்கள் அதைத் தவிர்ப்பதற்கு உதவக் கூடிய கடல் எல்லை சுட்டிக்காட்டி (MBI) கருவியொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சென். ஜோசப் கல்லூரி பொறியியல் பிரிவு மாணவர்கள் இக்கருவியை தயாரித்துள்ளனர்.

இக்கருவியை மீன்பிடிப் படகுகளில் பொருத்தியவுடன் அது ஜி.பி.எஸ். தொழில்நுட்பம்மூலம் படகு இருக்கும் நிலையை கண்டறியும். படகு ஆபத்தானவலயத்தை (எல்லையிலிருந்து 0.5 கிலோமீற்றருக்கு உட்பட்ட பிரதேசம்) அடைந்தவுடன் அக்கருவி எச்சரிக்கை சமிக்ஞையை எழுப்பும்

கடல் எல்லையைப் படகு நெருங்கினால் அதன் எரிபொருள் விநியோகத்தை மேற்படி கருவி துண்டித்து படகின் இயந்திரத்தை நிறுத்தச் செய்து விடும். இதனால் எல்லை கடக்கப்படமாட்டாது என இக்கருவியை தயாரித்த பின்ஸி பேர்பேட்சுவா கூறியுள்ளார். தனது சக மாணவரான நெல்சன் நவீனுடன் இணைந்து அவர் இக்கருவியை உருவாக்கியுள்ளார்.

இயந்திரம் நிறுத்தப்பட்ட பின் படகிலுள்ளவர்கள் அவசர நிலை பொத்தானொன்றை அழுத்தி திரும்பிச் செல்லலாம். ஆபத்து வயத்திற்குள் ஒரு தடவை மாத்திரமே இவ்வாறு செய்யமுடியும் என நெல்சன் கூறினார். இக்கருவிக்கு சுமார் 2ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 500 இந்திய ரூபா மாத்திரமே செலவாகும் என்றார். (எ-1)

# 2011.06 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ கி.மு 763-மெசொப்பொத்தேமியாவின் வரலாற்றுக் காலக் கோட்டைக் கண்டறிய உதவிய சூரிய கிரகணம் ஒன்றை அசீரியர்கள் பதிந்தார்கள்.

★ 1923-பிரான்சின் முதலாம் ரொபேர்ட் மன்னன் கொல்லப்பட்டான்.

★ 1184-நோர்வேயின் ஐந்தாம் மாக்னஸ் மன்னன் ஃபிம்ரெயிட் என்ற இடத்தில் இடம் பெற்ற போரில் கொல்லப்பட்டான்.

★ 1246-இரண்டாம் பிரெடெரிக்கின் இறப்புடன் ஆஸ்திரியாவின் பாபன்பேர்க் அரச வம்சம் அழிந்தது.

★ 1389-கொசோவோவில் இடம் பெற்ற சமரில் ஒட்டோமான் படைகள் செர்பியர்களையும் பொஸ்னியர்களையும் தோற்கடித்தனர்.

★ 1667-சான் பாப்டிஸ்ட் டெனிஸ் என்ற பிரெஞ்ச் மருத்துவர் முதன் முதலில் மனித இரத்த மாற்றீட்டை செயற்படுத்தினார்.

★ 1752-மின்னல் ஒரு மின்சாரம் என்பதை பெஞ்சமின் பிராங்கிளின் நிறுவினார்.

★ 1775-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டன் அமெரிக்கத் தரைப்படைத் தளபதியாக நியமனம் பெற்றார்.

★ 1808-ஜோசப் பொன்பார்ட் ஸ்பெயின் மன்னனாக முடி சூடினான்.

★ 1836-ஆர்கன்சா ஐக்கிய அமெரிக்காவின் 25 ஆவது மாநிலமானது.

★ 1844-இறப்பர் பதப்படுத்தும் முறை (vulcanization) சார்ள்ஸ் குடியர் என்பவரால் காப்புரிமம் பெறப்பட்டது.

★ 1846-இலங்கையின் ரோயல் ஏசியாட்டிக் சபை என்ற அமைப்பு தனது முதலாவது இதழை வெளியிட்டது.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியாவின் பீட்டர்ஸ்பேர்க் நகர் அமெரிக்கப் படைகளின் முற்றுகைக்குள்ளானது.

★ 1904-நியூயோர்க்கில் ஜெனரல் ஸ்லோகம் என்ற கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் ஆயிரத்து 21 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1911-ஐ.பி.எம். நிறுவனம் அமைக்கப்பட்டது.

★ 1938-பிரித்தானியாவில் லாஸ்லோ பைரோ என்பவர் குமிழ்முனைப் பேனாக்களைக் கண்டுபிடித்தார்.

★ 1944-இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் சாய்ப்பான் தீவை கைப்பற்றின.

★ 1954-ஐரோப்பிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு யூஏஃபா சுவிட்சர்லாந்தில் அமைக்கப்பட்டது.

★ 1996-ஐக்கிய இராச்சியம் மான்செஸ்டரில் இடம் பெற்ற தீவிரவாதிகளின் குண்டுத் தாக்குதலில் 200 பேர் காயமடைந்தனர். நகரின் மத்திய பகுதி பெரும் சேதத்துக்குள்ளானது.

★ 2007-உலகின் மிகவும் நீளமான 34 கி.மீ நீள தொடரூந்து சுரங்கப்பாதை சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலைக்குக் கீழாக அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1914-யூரி அந்திரோப்பொவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் (இ. 1984)

★ 1950-லக்ஸ்மி மிட்டால், லண்டனைச் சேர்ந்த உலகச் செல்வந்தர்களில் ஒருவர்

★ 1953-உமர் தம்பி, தமிழ்க் கணிமைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கியவர் (இ.2006)

### இறப்புக்கள்


★ 1836-ரோணியஸ், ஜேர்மனியத் தமிழறிஞர் (பி. 1790)

★ 1849-ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது ஜனாதிபதி (பி.1795)

★ 1971-வெண்டல் ஸ்டான்லி , நோபல் பரிசு பெற்றவர் (பி.1904)


★ 2008-தங்கம்மா அப்பாக்குட்டி, ஈழத்தின் ஆன்மீகவாதி (பி. 1925)

17) இரு வீடுகளிலும் உள்ள பிரகாசம் கூடிய மின்குமிழ்கள் எத்தனை?
(.............)



18) கூட்டில் அதிகளவில் உள்ள உரு எது?


19) மிகக் குறைந்தளவில் உள்ள உரு எது?


20) சம அளவில் காணப்படும் உருக்கள் இரண்டும் எவை?


△ + □ = ○ இம் மூன்று வடிவங்களினதும் எண் பெறுமதிகள் தொடர்பான கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக.

□ இதன் எண் பெறுமதி = 5

21) ○ இதன் பெறுமதியாக ஊகிக்கக் கூடிய விடை யாது?
1) நான்கு 2) மூன்று 3) எட்டு

22) □ + △ இவற்றைக் கூட்டினால் கிடைக்கும் பெறுமதி 8 எனின், □ - △ இவற்றைக் கழித்தால் கிடைக்கும் பெறுமதி யாது?
1) ஒன்று 2) இரண்டு 3) மூன்று

23) விபுலன் மூன்று நாட்களுக்கு ஒருமுறை வங்கிக்குச் செல்வான். துஷ்யந்தன் நான்கு நாட்களுக்கு ஒருமுறை வங்கிக்குச் செல்வான். இதன்படி ஜனவரி 2 ஆம் திகதி இருவரும் வங்கியில் சந்தித்தனர் எனின், இனி இவர்கள் இருவரும் வங்கியில் சந்திக்கக்கூடிய திகதி யாதாக இருக்கும்?
1) 13ஆம் திகதி 2) 14ஆம் திகதி 3) 15ஆம் திகதி

24) மூன்று மாடுகளையும் நடத்திக் கொண்டு ஒரு மனிதன் 9 கிலோமீற்றர் தூரம் சென்று ஓரிடத்தில் தங்கினான். ஒரு மாட்டை 9 கிலோமீற்றர் தூரம் நடத்திச் செல்வதற்கு 10 நிமிடங்கள் தேவைப்பட்டன எனின், 3 மாடுகளையும் நடத்திச் செல்வதற்கு தேவையான நேரம் யாது?
1) 10 நிமிடங்கள் 2) 30 நிமிடங்கள் 3) 90 நிமிடங்கள்

25) ஒரு பயிற்சிப் புத்தகத்திற்கு கவர் போடுவதற்கு ஒரு தாளின் $^1/4$ பகுதி போதுமானது. எனவே, இதுபோன்ற நான்கு தாள்களின் மூலம் எத்தனை பயிற்சிப் புத்தகங்களுக்கு கவர் போட முடியும்?
1) 4 புத்தகங்களுக்கு 2) 8 புத்தகங்களுக்கு
3) 16 புத்தகங்களுக்கு

26) A கடிகாரத்தில் சிறிய முள் (மணிமுள்) 6 இற்கும் 5 இற்கும் இடையிலும், பெரிய முள் (நிமிடமுள்) 10 இலும் காணப்படுகிறது. B கடிகாரத்தில் அதை விட 30 நிமிடங்கள் குறைவாக நேரம் காட்டுகின்றதெனின். B கடிகாரத்தின் நேரம் யாதாக இருக்கும்?
1) 5 மணி 10 நிமிடம் 2) 5 மணி 50 நிமிடம்
3) 4 மணி 40 நிமிடம்

**கீழ்வரும் கடிதத்தின் பகுதியை வாசியுங்கள்**

அன்பின் பிரதீப் அறிவது,
நாங்கள் அனைவரும் சுகமாக இருக்கிறோம். உனது நலம் எப்படி? உனது அப்பாவை சென்ற வாரம் பேருந்தில் சந்தித்தேன். உனது தங்கை பிரவினா புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் கூறினார்; வாழ்த்துக்கள். எனது தம்பி நர்மதன் அடுத்த வருடம் பரீட்சை எழுதுகின்றான். உன்னால் முடிந்தால், வினாத்தாள்கள், நூல்கள் என்பன அனுப்பி வை. உனது நண்பி துவாரகாவையும் சுகம் கேட்டதாகக் கூறு.
இப்படிக்கு - முஸ்தாக்

27) இக்கடிதத்துடன் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் எத்தனை பேர்?
1) இரண்டு பேர் 2) நான்கு பேர் 3) ஆறு பேர்

28) பேருந்தில் சந்தித்துக் கொண்ட இருவரும் யாவர்?
1) பிரதீப் - முஸ்தாக்கின் அப்பா
2) பிரதீப்பின் அப்பா - முஸ்தாக்
3) பிரதீப் - முஸ்தாக்


**பின்வரும் கவிதையை வாசித்து, இடைவெளிகளில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**


பூ .... A .... பொழில் இலங்கும் பொன் இலங்கும் - என்றும்
புகழ் இலங்கும் ..... B .... இலங்கும் பூதரமும் இலங்கும்

29) இடைவெளி A யில் வரவேண்டிய சொல் எதுவாக இருக்கும்?
1) வனம் 2) இலங்கும் 3) சோலை


30) இடைவெளி B யில் வரவேண்டிய சொல் எதுவாக இருக்கும்?
1) வளம் 2) தலம் 3) சீர்

31) ஒரு சதுர வடிவ அட்டையிலுள்ள ஒரு படத்தினை நான்கு முக்கோண துண்டங்களாக கீழே வெட்டி காட்டப்பட்டுள்ளது. அதன்படி கீழ் உள்ள 5 துண்டங்களில் முதலில் உள்ள சதுரப் படத்தை ஆக்குவதற்கு தேவையற்ற உரு எதுவெனத் தெரிவு செய்க.





32) 

இத் தகரத் துண்டிலிருந்து வெட்டிப் பெறப்பட்ட A எனும் பகுதியினால் ஏதோ ஒரு முறையில் ஆக்கக் கூடிய உரு பின்வருவனவற்றுள் எது?




**33 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


33) 

கூட்டினுள் தரப்பட்டுள்ள சொற்களை கீழே ஏதோ ஓர் ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது. மீதியாக இருக்கும் இரண்டு இடை வெளிகளையும் பொருத்தமாக நிரப்புக.
456 635 527 762 .... ....


34) கீழே தரப்பட்டுள்ள உதவிக் குறிப்புகளின்படி குறுக்கெழுத்துப் புதிர்ப் பெட்டியை இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் நிரப்புக.

**இடமிருந்து வலம்** 1) என்னைப் பெற்றவள்
2) புத்தகம் எடு, ........ படி


**மேலிருந்து கீழ்** 1) அன்னையும் இவரும் தெய்வங்கள்
2) 30 நாட்களைக் கொண்டது.




35) கீழே முதலிரண்டு தொகுதிகளிலும் உள்ள பொருட்களின் விலைகளை அறிந்து மூன்றாவது தொகுதியின் விலையைக் காண்க.




**கீழே உள்ள கைத்தொலைபேசியில் உள்ள இலக்கங்களை அவதானித்து விடை தருக.**




36) முக்கோண அமைப்பில் உள்ள மூன்று இலக்கங்களைக் கூட்டிய கூட்டுத்தொகை 14 ஆகும். அந்த மூன்று இலக்கங்களையும் எவையென எழுதுக.
(...............)

37) 8 இற்கு வடக்காகவும் 3 இற்கு மேற்காகவும் உள்ள எண்ணைவிட, 1 இற்கு தெற்காகவும் 6 இற்கு மேற்காகவும் உள்ள எண் பெரியதா? (ஆம் / இல்லை)
(...............)

ஒரு விழாவின்போது A எனும் சந்தியிலிருந்து B எனும் சந்தி வரையுள்ள 1000 மீற்றர் தூரத்திற்கு ஒரு பக்கத்திற்கு 10 கம்பங்கள் விதம் வீதியின் இருபக்கங்களும் கம்பங்கள் நாட்டப்பட்டு, மின்விளக்குகளாலும் வெளிச்சக் கூடுகளாலும் அலங்கரிக்கப்பட்டன. ஒவ்வொரு கம்பத்திலும் ஒவ்வொரு மின்விளக்குகள், இரு கம்பங்களுக்கிடையில் நான்கு வெளிச்சக்கூடுகளும் தொங்கவிடப்பட்டன.

38) அங்கு பயன்படுத்தப்பட்ட மின்விளக்குகள் எத்தனை?
(...............)

39) அங்கு அலங்கரிக்கப்பட்ட வெளிச்சக்கூடுகள் எத்தனை?
(...............)

40) இரண்டு கம்பங்களுக்கிடையில் ஒரு தாமரைப் பூ அலங்காரம் வைக்கப்பட்டது எனின், வீதியின் இரு மருங்கிலுமாக மொத்தம் எத்தனை தாமரைப் பூக்கள் பயன்படுத்தப்பட்டன.
(...............)

(பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்)



தென்னிலங்கையிலிருந்து வியாபார விளம்பரத்திற்காக போக்குவரத்தினை மேற்கொண்ட TATA நிறுவனத்தின் சிறிய ரக வாகனம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு மாலுசந்தியிலுள்ள ரெலிக்கொம் நிறுவனத்திற்குமுன் தடம்புரண்டதில் பலத்த சேதமடைந்ததை படத்தில் காணலாம்.

(படம்:- கரவெட்டி செய்தியாளர்)

# செவ்வாய்க் கிரகத்தில் காந்திஜி உருவில் பாறை

(லண்டன்)

செவ்வாய்க் கிரகத்தில் மகாத்மா காந்தியின் முகத் தோற்றமுள்ள பாறை ஒன்று இருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஐரோப்பிய விண்வெளிக் கழகம் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆர்பிட்டர் எனும் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது. இது தொடர்ந்து விண்வெளியிலிருந்து படங்கள் எடுத்து அனுப்பி வருகிறது. செவ்வாய்க்கிரகத்தில் எடுக்கப்பட்ட படங்களை ஆய்வு செய்தபோது அங்கு மகாத்மா காந்தியின் முகத்தோற்றமுடைய ஒரு பெரும் பாறையைக் கண்டதாக மட்டியோ லானியோ என்பவர் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியை நினைவுபடுத்தும் வழுக்கைத் தலை, கனத்த புருவம், மீசை ஆகியவற்றைக் கொண்ட தோற்றமுள்ள பாறையைக் கண்டதாக படங்களை ஆய்வு செய்த அவர் கூறியுள்ளார். இச்செய்தியை இங்கிலாந்து நாளேடான டெய்லி மெயில் வெளியிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# இலங்கைக்கெதிரான பொருளாதாரத் தடை கோரிக்கை இந்திய நலன்களுக்கு எதிரானது

## ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

இலங்கைக்கெதிராக பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரியிருப்பதானது இந்திய நலன்களுக்கு எதிரானது என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்திய முதலீட்டாளர்கள் மட்டுமன்றி இந்திய மத்திய அரசாங்கமும் பல்லேறு விடயங்களில் நிதிமுதலீடுகளை மேற்கொண்டுள்ளது. அவ்வாறான நிலையில் இலங்கைக்கெதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் பட்சத்தில் அது இந்திய நலன்களையே பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரஸ்தாப பொருளாதாரத் தடைக் கோரிக்கையை சட்டசபையில் நிறைவேற்றிக் கொண்டுள்ளார்.

அதே அறிக்கையில் விடுதலைப்புலிகளும் போர்க்குற்றங்களை இழைத்திருப்பது குறித்து அவர் கவனிக்க மறந்து விட்டார்.

அத்துடன் ஜெயலலிதாவின் பிரமாண்ட வெற்றிக்கு விடுதலைப் புலி ஆதரவுப் போக்குக்கு அவர் மாறியது காரணமாக அமையவேயில்லை. கருணாநிதி குடும்பத்தாரின் ஊழல் நடவடிக்கைகள் தான் ஜெயலலிதாவின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் சமாசத்துடன் தென்னிலங்கை மீனவர்குழு கலந்துரையாடல்

(கொழும்பு)

அகில இலங்கை மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பினைச் சேர்ந்த தென்னிலங்கை மீனவர்குழு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் சமாசத் தலைவர் சி. நவரட்ணம் தலைமையில் மேற்கொள்ளவுள்ளது.

இக்காலந்துரையாடலில் வடபகுதி, தென் பகுதி மீனவர்கள் நல்லுறவைப் பேண வேண்டியது அவசியம் என்பது பற்றியும் தென் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் அதாவது றோலர் படகுகளால் இலங்கை மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-6-3)

# கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கி மாணவர்களின் கல்விக்கு வித்திட்ட பெருந்தகையாளன் ஆனந்தசங்கரி



நான் எனது மாணவப் பருவகாலம் தொட்டு மதிப்பிற்குரிய தலைவர் வீ. ஆனந்தசங்கரியை நன்கு அறிவேன். நான் சிறுவனாக இருந்த காலத்தில் அவர் கிளிநொச்சியில் ஆற்றிய சேவைகள் பற்றி பலர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளேன்.

இயற்கையிலேயே அநீதிக்கு எதிராக போராடும் சுபாவம் கொண்டவர் ஆனந்தசங்கரி . அவர் கிளிநொச்சியில் கால் பதித்த காலப்பகுதியில் அங்குள்ள விவசாய நிலப்பரப்புக்களில் அநேகம் பெரும்கமக்காரர்களுக்கு சொந்தமானதாக இருந்தன. அந்தக் காலகட்டத்தில் புதிதாக குடியேற்றவாசிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிக் கப்பட்டன. அப்போது இரணைமடு குளத்து நீரை கமக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தி வந்தனர். இதனால் சிறு விவசாயிகளும் குடியேற்றவாசிகளும் தண்ணீருக்கு பெரும் கஷ்ரப்பட்டனர். இதை உணர்ந்த ஆனந்தசங்கரி அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி அவரது அயராத பணியினால் அனைத்துத் தரப்பினருக்கும் தண்ணீர் பகிர்ந்து கொடுக்கும் திட்டம் உருவானது.

கிராமசபை தலைவராக, பட்டினசபைத் தலைவராக பின்னர் 1970 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக அவரை ஆக்கிய பெருமை கிளிநொச்சி மண்ணையும், மண்சார்ந்த மக்களையுமே சாரும்.

கடந்த 1972 ஆம் ஆண்டு தந்தை செல்வா, சட்டமேதை அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் மற்றும் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் அரும்பாடுபட்டு உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டமேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை தலைவராகக் கொண்ட தமிழ் காங்கிரசில் இருந்து இணைந்து கொண்ட ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி அவர்களே.

1970 தொடக்கம் 1983 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலம்தான் கிளிநொச்சியின் பொற்காலம் எனலாம். அதன் காரணமாக தமது மாணவர்கள் பல்கலைக் கழகம் செல்லவேண்டுமானால் அதனை தனி மாவட்டங்களினால் தான் அது சாத்தியம் ஆகும் என்பதனை புரிந்து கொண்டு பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் கிளிநொச்சியை தனி மாவட்டமாக்கினார். இன்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள்,பட்டதாரிகள் மற்றும் சட்டத்துறை வல்லுநர்கள் என பலர் உருவாகியுள்ளனர். இதற்கு காரணமானவர் தலைவர் ஆனந்தசங்கரியேதான்.

1983 ஆம் ஆண்டு அன்றைய அரசு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாது மேலும் 6 வருடங்களுக்கு நாடாளு மன்றத்தை நீடித்தபோதும் இது ஜனநாயகத்துக்கு விரோதமான போக்கு என்று கூறி தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்தனர். நாடாளுமன்ற பதவியை துச்சமென தூக்கி எறிந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஆனந்தசங்கரியும் ஒருவர் . அன்றிலிருந்து இன்றுவரை பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் ஆசைப்படாமல் தமிழர் விடுதலைக்கூட்டணியை வழிநடத்திச் செல்லும் பெருமை அவரையே சேரும்.

தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் அவலநிலை வந்துவிடக்கூடாது என்பதற்காக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு தரப்பினருக்கும் எவ்வளவோ ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கடிதம்மூலம் தெரியப்படுத்தினார்.

அதன் விளைவு தமிழ் மக்கள் இழக்கக் கூடாதவற்றையெல்லாம் இழந்துள்ளார்கள். யார் தவறு செய்தாலும் அதை நேருக்கு நேர் நின்று சுட்டிக்காட்டுவதில் அவருக்கு நிகர் அவரே என்று சொல்லலாம். அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்த சர்வகட்சி மாநாட்டிற்கு நானும் ஒரு தடவை சென்றிருந்தேன். அப்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்த நேரம் இன்னும் 85 ஆயிரம் பேர்தான் அங்கு சிக்குண்டிருக்கின்றார்கள் என ஜனாதிபதி சுட்டிக் காட்டியபோது இல்லை 3 இலட்சம் பேர் அங்கு இருக்கிறார்கள் என ஆனந்தசங்கரி புள்ளி விபரத்துடன் எடுத்துக்கூறினார்.

யாரும் அதனை நம்பவில்லை. அமைச்சர்களும் ஜனாதிபதியின் கூற்றையே நியாயப்படுத்தினார்கள். தனியாகவே இதனை அவர் வாதிட்டுக் கொண்டிருந்தார். ஏனைய கட்சித் தலைவர்களும் இதனை பார்த்துக் கொண்டிருந்தனர். பின்னர் நடந்த ஒரு கூட்டத்தில் அமைச்சர் பசில்ராஜபக்ஷ, ஆனந்தசங்கரி மட்டும் தான் 3 இலட்சம் மக்கள் இருப்பதாக சுட்டிக்காட்டினர். நாங்கள் வெறும் 1 இலட்சம் மக்களுக்கான தேவைகளையே பூர்த்தி செய்து வைத்திருந்தோம் என அரசாங்கத்தின் தவறை ஒத்துக்கொண்டனர்.

இறுதியாக கிளிநொச்சி நகரத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் தயவு செய்து பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் எனக் கேட்டிருந்தார். அவரும் அதற்கு செவிசாய்க்கவில்லை. அதேபோல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தார். இனிமேல் யுத்தம் என்ற பெயரில் எந்த ஒரு அப்பாவி உயிரும் கொல்லப் படக்கூடாது என்று கேட்டிருந்தார். ஜனாதிபதி அவர்களும் செவிசாய்க்கவில்லை. அவரும் இன்று ஐ.நா.சபையில் போர்க் குற்றவாளியாக நிற்கின்றார். இப்படித்துணிச்சலாக செயற்பட்டு, தவறுகளை சுட்டிக்காட்டும் ஒரு தலைவரை நாடாளுமன்றம் அனுப்பாமல் போனது எமது மக்கள் செய்த பல வரலாற்று தவறுகளில் இதுவும் ஒன்றாகும். அந்தத்தலைவனின் அருகில் இருந்து அரசியல் பணி செய்வதை நான் பெரும் பேறாக எண்ணுகிறேன். அவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**இரா.சங்கையா**
**யாழ்.மாநகரசபை உறுப்பினர்.**

# பானத்தில் ஆணிகளை கலந்து அருந்தக் கொடுத்த எஜமானி

லெபனானில் பணிபுரியும் இலங்கைப் பணிப் பெண்ணுக்கு பானத்தில் ஆணிகளை கலந்து கட்டாயப்படுத்தி அருந்தக் கொடுத்துள்ளதால் தற்போது குறித்த பெண் அந்நாட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலியைச் சேர்ந்த மூன்றரை வயது குழந்தையின் தாயான இந்திக்கா மல்காந்தி என்ற பெண்ணே தற்போது சிகிச்சைக்காக லெபனான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கைப் பெண் இலங்கையில் உள்ள தனது கணவனிடம் இச்சம்பவம் குறித்து நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் அறியப்படுத்தியுள்ளதாகவும் அங்கு தொழில் வழங்குநரால் தனக்கு ஏற்பட்ட கொடுமைகளை கூறியுள்ளதுடன் உடனடியாக தன்னை சொந்த நாட்டிற்கு திருப்பி எடுக்குமாறு கூறியுள்ளார்.

இந்திக்கா மல்காந்தின் வெளிநாட்டு வேலை வாயப்பு பணியகத்தின் ஊடாக லெபனானுக்கு பணிப்பெண்ணாக சென்று 6 மாதங்களாகின்றன என்று அவரது கணவர் தெரிவித்துள்ளார்.

மல்காந்தி அவரது வீட்டு எஜமானி கடந்த இரு வாரங்களாக ஆணிகளை பானத்துடன் கலந்து கட்டாயப்படுத்தி அருந்தக் கொடுத்துள்ளார். இதன்பின் குறித்த பெண் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மல்காந்தியின் கணவன் லெபனானிற்கு பணிப்பெண்ணாக அனுப்பிய முகவரகத்துடன் தொடர்புகொண்டு அவரை இலங்கைக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியதற்கு 2 இலட்சம் செலுத்தும்படி முகவரகம் தெரிவித்துள்ளது.

(ஶ்ரீ-2)

# யுத்தம் காரணமாக கணவரை இழந்த பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி

## அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு விதவைகளுக்கு இந்திய அரசின் உதவியுடன் சுயதொழில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 800 விதவைகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அதற்கு இந்திய அரசு முதற்கட்டமாக 203 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு- கிழக்குப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சுயதொழில் பயிற்சிகளை அளித்து சுயதொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்தவென எதிர் வரும் வாரம் சேவா இந்தியா நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவென 50 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இந்தியாவில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்கள் பயிற்சி வழங்கப்பட்டு அதன் பின்னர் அவர்கள் ஊடாக விதவைப் பெண்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

(ஶ்ரீ-2)



தும்பளை யோகசாந்தி நிலையத்தினரிடம் யோகப் பயிற்சி பெற்ற வைத்திய கலாநிதி தெபோரா ,வைத்திய கலாநிதி சொணோகா ஆகியோர் அந்நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்கிய ஒருதொகைப் பணத்தை விபத்தில் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு தும்பளை யோகசாந்தி நிலைய ஆலோசகர் பொன்மகாதேவா வழங்குவதையும் அருகில் தும்பளை யோகசாந்தி நிலைய ஆசிரியர் தே.தேவராஜேந்திரன், சனச வங்கி முகாமையாளர் சி. அற்புதகிருஸ்ணன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சட்டவிரோத கட்டடங்களால் டெங்கு பரவும் அபாயம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு சொந்தமான தொடர்மாடிகளுக்கு அண்மையில் காணப்படும் நீர் வெளியேறும் வடிகால் கட்டமைப்புக்கள் தடைப்பட்டுள்ளமை தான் கொழும்பு நகரில் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பரவுகின்றமைக்கு கார ணமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.குறித்த வடிகால் கட்டமைப்புக்கள் தடைப்படும் வகையில் கட்டடங்கள் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதன் காரணமாக நீர் வழிந்தோடல் தடைப்பட்டுள்ளமையால் ஆங்காங்கே நீர் தேங்கி நிற்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் சிலர் கொழும்பில் அமைந்துள்ள டர்பண்டயில் தொடர்மாடிக்கு நேற்று முன்தினம் சென்றிருந்த வேளையில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

வீடு அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் இதன் போது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (ஶ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தினை/கங்கு

**Botanical Name: Setariitalica**
**Family: Gramineae**
**English:Italian millet**
**Sinh: Thanahal**

தினை ஓராண்டுசெடியாகும் தண்டானது 0.6 தொடக்கம் 1.6 மீற்றர் உயரமுடையதும் பளபளப்பானதாகவும் காணப்படும். இலைகள் தட்டையான மெல்லிய நீண்ட வேலுருவானதும் கூரிய முனைகளைக் கொண்டதுமாகும். 45-60 செ.மீற்றர் நீளமுடையது; 2.5 செ.மீ அகலமுடையதும் மென்மையானதுமான உரோமங்களையும் இருபாலான பூக்களைக் கொண்டதுமாகும்.

### பரம்பலும் இனவிருத்தியும்


இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பயிர்செய்யப்படும் சிறுதானிய வகையாகும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

தினையில் தானியம் உமி மூடியிருக்கும். இத்தன்மையில் இது நெல்லைப் போன்றிருக்கும். இதைக் குற்றி உமியை நீக்க வேண்டும். தானியம் சிறிதாகவும் உருண்டையாகவும், மென்மையாகவும் காணப்படும். நிறத்தில் பெரும்பாலும் மஞ்சள் நிறமாகவும் சிவப்பு நிறமாகவும் இன்னும் சில கருநிறமாகவும் இருக்கும்.

தினையில் பல வகையுண்டு. இவற்றைக் கதிரின் உருவத்தாலும், தானியத்தின் நிறத்தாலும் வேறுபடுத்தலாம். செந்தினை கருந்தினை என்ற தமிழ்ப்பெயர்களும் தானிய நிறத்தைக் கொண்டே அமைந்துள்ளன. சடைத்தினை என்பது அந்த வகையிய் கதிரின் தோற்றம் பின்னல் போலிருப்பதைக் காட்டுகிறது.

100 கிராம் தினையரிசியிலுள்ள சத்துக்கள்

புரதம் 12.3 கிராம்
கொழுப்பு 4.3 கிராம்



காபோவைதரேற் 60.9 கிராம்
கல்சியம் 31 மி.கி
பொசுபரசு 290 மி.கி
இரும்பு 12.9 மி.கி
ß கரோட்டின் 32 மைக்கிரோகிராம்
தயமின் 590 மைக்கிரோகிராம்
ரைபோபிளேவின் 110 மைக்கிரோகிராம்
நியாசின் 3.2 மி.கி
நார்ப்பொருள் 8 கிராம்
சக்தி 331 கி.கலோரி
ஈரலிப்பு 11.2 கிராம்

### மருத்துவப் பயன்கள்

இது ஒரு சிறந்த தானிய உணவாகும். ஆனால் மிகவும் அதிக சூடானதெனக் கருதப்படுகிறது. உமியை நீக்கிய பின் கிடைக்கும் தினை அரிசியை, நெல் அரிசியைப் போல் சமைத்து சாப்பிடலாம்.

தினை இனிப்பு சுவையுடது. இது உடலுரமாக்கி (Nutrient) என்பதால் உடலுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியது. பசியை உண்டாக்கக்கூடியது. வாதநோய்க்கு சிறந்த தானிய உணவாகும்.

✸ தினை அரிசியை உணவாக சமைத்து உண்பதால் உடலை காக்கும் தன்மையுடையது.

✸ தினையை உமிநீக்கி 24 மணி நேரம் நீரில் ஊறவைத்து பின்பு தூய பருத்தித்துணியில் முடித்து முளை வரும்வரை 3 நாட்கள்கட்டித் தொங்க விடவேண்டும். அது முளைவிட்ட பின்பு புதுச்சாடியில் இட்டு வறுத்து திரித்து அரித்து வைத்துக் கொள்ளவும். தினமும் தேக்கரண்டி அளவு தேனுடன் இரவு சாப்பாட்டிற்க்கு பின் எடுக்க தோல் மிருதுவாக வருவதுடன் முகம் அழகாகவும் கறுப்புப்புள்ளிகள் அற்றும் பளபளப்பாக தோற்றம் பெறும்.

✸ தினைமாவை பாயாசமாகக் செய்து குழந்தைகளிலிருந்து வயோதிபர் வரை பருகிவர உடற்பலம் அதிகரிக்கும். இதற்கு தினைமா ஒருகப், பசும்பால் ஒருகப், கசகசா 50 கிராம், ஏலக்காய் 10 கிராம், முந்திரி பருப்பு 20 கிராம், சீனி 1/4 கிலோ, பசுநெய் 2 மேசைக்கரண்டி ஆகியவற்றை அளவுப்படி எடுத்துக் கொள்ளவேண்டும். தினை மாவை நீரில் இட்டு கொதிக்கவிட்டு நன்கு குழைய வெந்ததும் கசகசாவை அரைத்து ஊற்றவும் பின்பு பசும்பாலை ஊற்றவும் பின்பு சீனியைப் போட வேண்டும். வாணலியில் பசுநெய் 2 மேசைக்கரண்டி ஊற்றி மேற்படி கலவையையும் பொடித்த ஏலக்காய், பொடித்த முந்திரிப்பருப்பு போட்டு நன்கு கிளறி விடவேண்டும்.

இது உடம்பிற்கு பலத்தைத்தரும். உடலைக் காக்கும் உப உணவாகவும் அமையும்.

குறிப்பு – சிறுதானியங்கள் உடற்சக்திக்கு தேவையான சத்துக்களை வழங்குகின்றன.. நம் உழைப்பிற்கு தேவையான சக்தியென்ற கலோரிகளில் பெரும்பகுதி தானியங்களின் மூலம் தான் எமக்குக் கிடைக்கின்றன. எனவே இவ்வகையான சிறுதானியங்களை நாம் தமது அன்றாட உணவுகளில் சேர்த்துக் கொள்ளல் அவசியமானதாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

நம்முடைய நன்மையை நாம் அடையாவிட்டாலும் பிறருடைய நன்மை இருக்கவே இருக்கிறது. அதனைச் செய்ய முயல்வோம். – ஜார்ஜ் எலியட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பாதுகாப்பு ஆளியின் (Trip Switch) மகத்துவத்தை யார் அறிவார் அச்சோவே!

ஆபத்துக்கள் என்பன எங்கும் இருக்கக் கூடியவை. அவற்றில் இருந்து தப்பித்துக் கொள்வதிலேயே மனித வாழ்வு தங்கியுள்ளது.

'ஆபத்து' என்று நினைப்போமாயின் எதனையுமே செய்ய முடியாமல்போகும். உதாரணமாக வீதியில் பயணிப்பது ஆபத்தானது எனில் எவருமே வீதியில் இறங்க முடியாது. அப்படியானால் வாழ்வு எப்படிச் சாத்தியமாகும்!

எனவே வீதியில் பயணிப்பது ஆபத்தானதெனில் ஆபத்தை தவிர்க்கக்கூடிய வழிமுறைகளை பின்பற்றினால் ஆபத்தை வென்று கருமத்தை நிறைவேற்ற உதவும்.

இதற்காகவே வீதி ஒழுங்குமுறைகள் சமிஞ்ஞைகள், அறிவுறுத்தல்கள் என்பன வகுக்கப்பட்டுள்ளன.

எல்லோரும் வீதி விதிமுறைகளைப் பின்பற்றுவோமாயின் விபத்துக்களை–அதனால் ஏற்படும் ஆபத்துக்களை தவிர்க்க முடியும்.

எனவே எதில் ஆபத்து இருக்கிறதோ அதற்கான பரிகாரங்களை செய்வது கட்டாயமானதாகும்.

அந்த வகையில் மின்சாரத்தால் ஏற்படக் கூடிய ஆபத்தைத் தடுக்கவேண்டுமாயின் அதற்காக மின்சாரப் பயன்பாடு இருக்கக்கூடிய அத்தனை இடங்களிலும் தானியங்கி பாதுகாப்பு ஆளியை (Trip switch) கட்டாயமாகப் பொருத்த வேண்டும்.

ஆனால் எங்களிடமோ பாதுகாப்பு ஆளியைப் பொருத்தும் வழக்கம் மிகக்குறைவு.

மின்னிணைப்பிற்கான செலவைக் குறைக்க வேண்டும் என நினைத்தால், அதற்காக தானியங்கி பாதுகாப்பு ஆளியை (Trip switch) பொருத்தாமல் விடும் பழக்கமே எங்களிடம் உண்டு.

உண்மையில் மின்னிணைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் அதற்காக தயாரிக்கும் பட்டியலில் முதலாவதாக இடம்பெறவேண்டியது பாதுகாப்பு ஆளியாகும்.

சரி, பாதுகாப்பு ஆளியில் பொதுமக்கள்தான் அக்கறை கொள்வதில்லை என்றால், அரசு – அல்லது இலங்கை மின்சார சபையாவது தானியங்கி பாதுகாப்பு ஆளி பொருத்தப்படாத இடங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படமாட்டாது என்று கூறலாம் அல்லவா?

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களில் பயணித்தால் ஆகக்குறைந்தது மூவாயிரம் ரூபாயைத் தண்டமாக விதிக்க முடியும்.

ஒரு தலையை காப்பாற்றுவதற்கு இந்தத் தண்டனை என்றால் வீட்டிலுள்ளவர்களை, அயலவர்கள் மற்றும் பொது மக்களைக் காப்பாற்றுவதற்காக தானியங்கி பாதுகாப்பு ஆளி (Trip switch) இல்லாத வீடுகள், நிறுவனங்கள், பொது அமைப்புகள் மீது அதிக தண்டம் விதிக்கலாம் அல்லவா?

என்ன செய்வது! எங்கள் நாட்டில் சில ஆபத்துக்களில் காட்டும் அக்கறை பல ஆபத்துக்களில் காட்டப்படுவதில்லை.

இந்த அசமந்தத்தால் உயிரிழந்தவர்கள் பலர். வீட்டில் தானியங்கி பாதுகாப்பு ஆளி இருந்தால் –அது இயங்கி இருந்தால் இந்தஅவல மரணத்தை தவிர்த்திருக்கலாம் என்று நினைக்கும் போது, நெஞ்சம் நெருடுகிறது.

ஓ! எனதருமை மின்சாரசபை சோதரர்களே! நீங்கள் வீடுகளுக்குச் செல்லும்போது பாதுகாப்பு ஆளி (Trip switch)இருக்கிறதா? இயங்குகிறதா?என்பதை ஒரு கணம் பார்த்துச் செல்லுங்கள் உங்களுக்கு உயிர்காத்த புண்ணியம் கிடைக்கும்.

எதற்கும் யாப்பு என்ற வரையறையை விடுத்து நல்லதை நினைத்து எழுதாத யாப்புக்களையும் பின்பற்றுவோமாக.

# வானுயர்ந்த சிந்தனைகளாலும், செயலாலும் வழிகாட்டிய சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார்



தமது வானுயர்ந்த சிந்தனைகளாலும் சொல்லாலும் செயலாலும் வழிகாட்டிய சிவத்தமிழ்ச் செல்வி அம்மையார் ஒரு தெய்வ மானிடம். அம்மையாரின் சைவசமய பரிபாலனத்தையும் சமுதாயப் பணிகளையும் சிந்திக்க வேண்டிய ஒரு நாளாக அமைகின்றது இன்று.

அம்மையாரின் சைவப் பிரசங்கம் தனித்துவமானது. பிரதி தோறும் செவ்வாய்க்கிழமைகளிலும் விசேட விழாக் காலங்களிலும் பத்து நிமிடங்கள் மாத்திரமே பேசும் சிந்தனைகள் அர்த்த

## அவரது நினைவு தினம் இன்று

புஷ்டி வாய்ந்தவை யாகும். இதன் மகத்துவம் தெல்லிப் பழை துர்க்கை அம்பாளை வழிபாடு செய்யும் அடியார்களுக்கு புதுமையானது அல்ல. அடியார்களின் சைவ வாழ்வுக்கு வழிகாட்டிய பெருமை சிவத் தமிழ்ச்செல்வி அம்மையாரையே சாரும்.

இதன் சிறப்பை அவதானித்த சைவப் பேரறிஞர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்.

" எக்கச்சக்கமான சனக்கூட்டம் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் பிரசன்னமாகி இருக்கிறார்கள். எவரும் எதிர்பார்க்கத்தக்கவாறான சத்தம் , சந்தடி, நெரிசல், இடிபாடு எதுவும் கிடையாது. அதற்கெதிர் ஊசி விழும் அரவமும் கேட்கக்கூடிய அளவிலான அமைதி ஓங்கும். கட்டுப்பாடும் பய பக்தியும் அச்சனக்கூட்டத்திடை உணர்வோடுணர்வாய் ஊறிப்போய்விட்டவை. இத்தனைக்கும் பிரதம நிர்வாகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் தமிழ் நிகழ்ச்சி ஒவ்வொன்றுக்கும் முன்னோடியாக 5,10 நிமிடம் ஆலய மண்டபத்தை அடக்கமாக கிளம்ப அலையனையாய் உயர்ந்தது. ஆவ லூற்று செவி மடுக்கும் அச் சனக் கூட்டம் முழுவதையும் அலையடைங் கிய சமுத்திரம் போலாக்கி ஆறாமை தோன்ற அமையுறும் தமிழ் வென் சொற் பழியாது, வீண்சொல்விரவாது, வேண்டியது வேண்டியவாறாமையச் செய்யும் விந்தைத் தமிழ்.

அதிற் கால்கொண்டு இருக்கும் விந்தையான அம்சம் சிவம். சிவம்– நன்மை, இன்பம்,மங்கலம், தூய்மை இத்தனைக்கும் இடம் கொடுக்கும் செல்வி தமிழ் சிவத்தமிழ்"

இவ்வாறாக சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் சொற்பொழிவின் பெருமைகளை சிறப்பித்தவர் யாரும் இல்லை. அவர் தான் ஏழாலையில் வாழ்ந்த சைவத் தமிழ் பேரறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்கள் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சைவ சித்தாந்த கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரை இன்று நினைவு கொள்வோமாக.

**கா.சிவபாலன்**

# காரைநகரில் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு

காரைநகரில் கடற்படையினரின் முகாம் விஸ்தரிப்பிற்கென சுவீகரிக்கப் பட்ட காணிகளின் உரிமையாளர்களின் ஒரு பகுதியினருக்கு நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட விருப்பதால் அக்கொடுப்பனவுகளுக்குரிய உரித்தாளர்கள் தங்களுக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையால் காணிக்குரிய பெறுமதி குறித்து அனுப்பப்பட்ட 17 ஆவது வெகுமதிச் சான்றிதழுடன் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் தவறாது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக காணிக் கிளைக்கு நேரடியாக சமுகமளிக்கு மாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார். நட்ட ஈடு வழங்கப்படவுள்ள காணி உரிமையாளர்களின் பெயரும் காணித்துண்டு இலக்கமும் வருமாறு,

சபாரட்ணம் கந்தசாமி–55, காசிநாதர் தேவேந்திரன்–9, பொன்னுத்துரை கமலாதேவி– 12, பழனிவேல் ஜெயா தேவி–15, கதிரவேலு சண்முகரட்ணம்– 16, ஆறுமுகம் கமலம் – 19, சண்முகராஜா நாகராஜேஸ்வரி – 20,கந்தசாமி சிவயோகம் – 21, சிவசம்பு திருநாவுக்கரசு–25, லீலாவதி மகாதேவன்–27, கதிரவேலு சண்முகரட்ணம் – 29, வளர்மதி கந்தசாமி – 30, நடராஜா பரமேஸ்வரி –31, நமசிவாயம் நாகேஸ்வரி–32, கமலாதேவி சச்சிதானந்தம்–33, கதிரவேலு சண்முகரட்ணம்–34, அம்பிகைபாகன் கெங்காதேவி –40, செல்லையா ராமுப்பிள்ளை– 41, செல்ல துரை ஞானேந்திரன் – 42, அன்னம்மா சௌந்தரம் – 47, மகாலிங்கம் தேவராஜா – 54, தவமணி யோகேஸ்வரன்– 116, அருணாசலம் திருநாவுக்கரசு–133, அருணாசலம் பொன்னம்பலம்–132, செல்வராஜா யோகேஸ்வரி –127, காசிப்பிள்ளை அன்னபூரணம் – 118, சௌந்தரம் கனக சபை – 119, சௌந்திரம் சிவப்பிரகாசம்–139,நவரட்ணம் லீலாவதி– 56, சுப்பிரமணியம் ராஜலிங்கம் –63, அருணாசலம் சரஸ்வதி – 672/2, ராமு கந்தையா– 71, சரஸ்வதி கந்தையா– 72, சோமசுந்தரம் தனலட்சுமி– 73, பூதன் முருகன்–75, யோகம்மா கந்தசாமி– 76, கதிரன் நாகம்மா – 77 , மகேஸ்வரி சங்கரப்பிள்ளை– 78, மெய்யழகன் ஜெயா – 81, யோகம்மா ஆறுமுகம்– 83, சின்னட்டி வேலன் மற்றும் கதிரன் நாகம்மா– 88, சின்னட்டி முருகன் – 94,சின்னட்டி கந்தையா– 95, செல்வராஜா தேவநாயகி –98, செல்வராணி முத்துலிங்கம் – 100, கந்தையன் முருகன்– 101, வைத்திலிங்கம் பரமசாமி –109, பேரம்பலம் பாலசுப் பிரமணியம்–113, நடராஜா ராஜலட்சுமி – 134, அருணாசலம் சோமசுந்தரம் –135, அருணாசலம் திருநாவுக்கரசு –129, குழந்தைவேலு சிவப்பிரகாசம் –140, இந்திராணி அம்பலவாணர் –141, ஐயன் செல்லத்துரை –148, செல்லையாப்பிள்ளை நடேசன் –152. (ஸ்ரீ)

## சாயி நிலையத்தில் போயாதின நிகழ்வு

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் யாழ். பல்கலைக் கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தியசாயிசேவா நிலையத்தில் இன்று காலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனமும் காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆன்மீக நிகழ்வில் வேதபாராயணம் காயத்திரி மந்திரம் பஜனை என்பனவும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் முற்பகல் 11.15 மணிக்கு சுவாமியின் அற்புத இறை அனுபவங்கள் என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக இசைத் துறைத்தலைவர் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் விசேட சொற்பொழி வாற்றவுள்ளார். (ஸ்ரீ)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### அன்பு தான் வாழ்க்கை



உன் உடலில் விழுந்த ஒருதுளி மையைப் பற்றி கவலைப்படாதே! இறைவன் என்னும் கருணைக்கடலில் மூழ்கி எழுந்திரு, இது போன்ற ஆயிரம் துளிகள் இருப்பினும் அவை இருந்த இடம் தெரியாமல் போகும்.

நமக்கு நாமே நன்மை செய்து மோட்சத்தை அடைவதைவிட மற்றவர்களுக்கு நன்மை செய்து ஆயிரம் நரகங்களுக்கு செல்ல தயாராக இருக்க வேண்டும்.

அன்பு,நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றும் நமக்கு தேவையில்லை. அன்பு தான் வாழ்க்கை.

சமயம் என்ற பெரிய கறவை மாடு பலமுறை உதைத்திருக்கலாம். ஆனால் அதை நாம் பொருட்படுத்த வேண்டாம். காரணம் கறவை மாடு அதிகம் பால் தருகிறது. இதனால் பசுவின் உதையைப் பால்காரன் பொருட்படுத்தமாட்டான்.

துணிந்து செயற்படுங்கள். எதையும் முடிக்க வேண்டும் என்ற முடிவுடன் செயற்பாட்டில் இறங்குங்கள்.


முடியாது என்ற வார்த்தையை அகராதியை விட்டு அகற்றுங்கள்.

## மானிப்பாய் புனித அந்தோனியார் திருவிழா

(ஊர்காவற்றுறை)

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4.30 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை வழிபாடும் மறுநாள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியும் திருச் சொரூபப் பவனி ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறவுள்ளது. (ஸ்ரீ-72)





புனித யாகப்பர் ஆலய யூபிலி ஆண்டை முன்னிட்டு குருநகர் 4 ஆம் வலயத்தில் இடம்பெற்ற "மரம்" என்னும் பொருளில் விழிப்புணர்ச்சி தெரு நாடகத்தின் ஒரு சில காட்சிகளை படத்தில் காணலாம்.

(படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக விரிவுரையாளர் சம்மேளனம் குற்றச்சாட்டு

அமைச்சின் அதிகாரிகளுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை நாட்டின் அரசியல் தலைவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமது சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் ஊடகப் பேச்சாளர் கலாநிதி மஹீன் மெண்டீஸ் குறிப்பிட்டார்.

கல்வி அறிவு இல்லாதவர்கள் நாட்டை நிர்வகிக்கும் போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக அவர் குற்றஞ்சுமத்தினார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்பில் கீழ்த்தரமான கருத்துக்களை வெளியிடும் கல்வியறிவு இல்லாத அரசியல்வாதிகளை மக்கள் அடையாளம் காண வேண்டும் எனவும் கலாநிதி மஹீன் மெண்டீஸ் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்மேளனம் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை உயர்கல்வி பிரதி அமைச்சர் நந்திமித்திர ஏக்கநாயக்க நிராகரித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்கள் எனவும் செயலாளருக்கு கலாநிதி பட்டமொன்று உள்ளதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவனங்களிலும் கல்வி அறிவுடையவர்களே, புத்திஜீவிகளே கடமையாற்றுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடும்தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியாது எனவும் பேச்சுவார்த்தைகளின் மூலம் சிறந்த பலனை அடையமுடியும் எனவும் உயர்கல்வி பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

## அரச வாகனங்களை கண்காணிக்க விசேட அதிகாரி நியமனம்

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் அரச வாகனங்களை பயன்படுத்துவது தொடர்பில் கண்காணிப்பதற்கு விசேட அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு அனைத்து அரச நிறுவன பிரதானிகளுக்கும் தேர்தல் ஆணையாளரால் பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சுக்களில் இவ்வாறான அதிகாரிகளை நியமிக்கும் போது அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் அல்லது அதற்கு ஈடான பதவி உடைய ஒருவரை நியமிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் அரச வாகனங்கள் பயன்படுத்தப்படுவது தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சிறந்த கிராம அலுவலர்களுக்கான விருது நேற்று வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா நினைவாக மாவட்ட மட்டத்தில் சிறந்த கிராம அலுவலருக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மூன்று கிராம சேவையாளர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

இதில் உடுவில் பிரதேச செயலகர் பிரிவில் கிராம சேவையாளராக பணிபுரிந்து வரும் எயூஜின் மசனட் முதலிடத்தையும் கரவெட்டி பிரதேசத்தில் கிராமசேவையாளராக பணிபுரியும் பா. லலித் இரண்டாவது இடத்தையும் தெல்லிப்பளை பிரதேசத்தில் கிராம சேவையாளராக பணிபுரியும் எஸ். பூபாலசிங்கம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக ஹேம லதா ஞாபகார்த்த நிதியத்தின் தலைவர் எஸ். ரமேஷ் மற்றும் பிரதேச செயலர்கள், யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)


## தனி மாவட்டத்தின் தந்தையை வாழ்த்துகிறேன்



எமது கிளிநொச்சித் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சியை தனி மாவட்டமாக உருவாக்கிய தந்தை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தந்தை செல்வா, தலைவர் ஜீ.ஜீ வழிநின்று தளராது, ஓயாது உழைக்கும் உத்தம தலைவன் எனது அன்புக்குரிய ஆசிரியர் உயர்திரு வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்கள் இன்று தமது 78 ஆவது அகவையில் கால் பதிக்கும் நாளில் அவரை எம் இனத்துக்கான சேவையை ஆற்ற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

உங்கள் மாணவன்
பொன் தில்லைநாதன்
(சமாதான நீதவான்)
முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்,
(ஆரம்பப்பிரிவு)
கிளிநொச்சி வலயம்.

(5196)



## 21 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தாய் மடியில்
07.12.1940

இறை அடியில்
25.05.2011

### அமரர் சரவணமுத்து அருணாசலம்

திதி: வைகாசி அபரபக்க நவமி

அருணோ தயமாய் இருந்தீர் அப்பா,
அளப்பில பணிகள் புரிந்தீர் அப்பா,
இருளில் எம்மை இங்கே விட்டு
எங்கே மறைந்தீர் அருணா சலமே!

கடந்த (25.05.2011) புதன்கிழமையன்று சிவபதமடைந்த எங்கள் தந்தை அமரர் சரவணமுத்து அருணாசலம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள், இன்று (15.06.2011) புதன்கிழமை, முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(5175)

83, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

அ.கோபாலராஜன் (ராஜன்) குடும்பம்,
அ.இராஜ்குமார் (குட்டி).




# மே.தீவுகள் அணிக்கு முதல் வெற்றி
# உலக சம்பியன் இந்தியா பணிந்தது

(அன்ரிகுவா)

பொல்லார்ட், மார்டீனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணி 103 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உலக சம்பியன் இந்திய அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு தொடரில் முதல் வெற்றிகிடைத்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஒரே ஒரு இருபது-20 போட்டி, 5 ஒரு நாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரே ஒரு இருபது -20 போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி தொடர்ந்து நடைபெற்ற முதல் மூன்று ஒரு நாள் போட்டிகளில் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் நான்காவது ஒரு நாள் போட்டி நேற்றுமுன்தினம் அன்ரிகுவாவில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் சுரேஷ்ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணிசிம்மோன்ஸ், பொல்லாட்டின் அபார ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்களில் 8 விக்கெட்களையிழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பொல்லார்ட் 72 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 70 ஓட்டங்களையும் சிம்மோன்ஸ் 78 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 67 ஓட்டங்களையும் பஜோ 39, ரசேல் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரவீன்குமார் 3 விக்கெட்டுக்களையும் அமித் மிஷ்ரா 2 விக்கெட்டுக்களையும், இஷாந்த் சர்மா, அஸ்வின் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.



பதிலுக்கு 50 ஓவர்களில் 250 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி மார்டீன் சுழலில் சிக்கி 39 ஓவர்களில் 146 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 103 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ரோகித் சர்மா 47 பந்துகளில் (ஒரு சிக்ஸ்சர் உட்பட) 39 ஓட்டங்களையும் பார்திவ் பட்டேல் 26, விராட் ஹோலி 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மார்டீன் 4 விக்கெட்டுகளையும் ரசேல் 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் சமி 2 விக்கெட்டுக்களையும் சிம்மோன்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது. எனினும் இந்தியா தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியுள்ளது.

இப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த மார்டீன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

வி.டி.ஜெரட்ண சிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் கலந்து கொள்கிறார். இன்றைய இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்கு வில் கே.சீ.சீ.சீ. மோதுகின்றது.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் அலுவலகத்தில் இரகசிய பொலிஸார் தேடுதல்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபையிலுள்ள (ஸ்ரீலங்கா கிரிக்கெட்) கிரிக்கெட் உலகக் கிண்ண அலுவலகத்தை சுற்றிவளைத்துள்ள இரகசிய பொலிஸ் குழுவொன்று அங்கு பல மணி நேரங்கள் வரையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உலகக்கிண்ண சுற்றுப் போட்டி குறித்து முக்கிய தகவல்கள் அடங்கிய கணனி ஹார்ட் டிஸ்குகள் காணாமல் போயுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையினால் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபையின் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் லோரன்ஸ் பெர்னாண்டோ உள்ளிட்ட அதிகாரிகளினாலேயே மேற்படி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொழும்பு, மெட்லண்ட் வீதியிலுள்ள குறித்த அலுவலகத்திற்கு சென்ற இரகசியப் பொலிஸார் அங்குள்ள அனைத்து கணனி இயந்திரங்களையும் பாரிய சோதனைக்கு உட்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கைவிரல் அடையாளங்களையும் அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

மேற்படி ஹார்ட் டிஸ்க் காணாமல் போனமையானது பிறிதொரு மோசடி நடவடிக்கையின் வெளிப்பாடாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்தார்.

குறித்த ஹார் டிஸ்க்குகள் காணாமல் போனமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடுத்தே மேற்படி சுற்றிவளைப்புத் தேடுதலுக்கு உத்தரவிடப்பட்டதாக இரகசியப் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய அமரசிங்க தெரிவித்துள்ளார்.

நான்கு ஹார்ட் டிஸ்க்குகள் காணாமல் போயுள்ளன. இவற்றில் உலகக் கிண்ணச் சுற்றுப்போட்டி ரிக்கெட்டுக்கள் விநியோகம் தொடர்பான முக்கிய தகவல்கள் அடங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் நாடுகளில் இடம்பெற்ற உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டிக்காக கொழும்பிலும் ஐ.சி.சி. அலுவலகம் ஒன்றைத் திறந்திருந்தது.

டிக்கெட் விற்பனை மூலமான 2 கோடி ரூபாயை இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் இன்னும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

கடந்த ஏப்பிரல் 02ஆம் திகதி உலகக் கிண்ணப் போட்டிகள் முடிபுற்ற போதிலும் இலங்கைக் கிரிக்கெட் ஊழியர்களுக்கு மேற்படி உலகக்கிண்ண அலுவலகம் இன்னும் பணத்தைக் கையளிக்கவில்லை.

உலகக் கிண்ண அலுவலகத்திலிருந்து பணத்தை எதிர்பார்த்து காத்திருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை நிதி பணிப்பாளர் கூறியுள்ள நிலையில், தமது ஜூன் மாத சம்பளம் குறித்து இலங்கை கிரிக்கெட் சபை ஊழியர்கள் ஏற்கெனவே அச்சம் கொண்டிருந்தனர். இந்நிலையிலேயே இந்த ஹார்ட் டிஸ்க் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# மன்னாரில் நேற்று...

தோட்டவெளி புனித வேதசாட்சிகளின் ஆலயப் பகுதியில் 600 வேத சாட்சிகளின் (15 ஆம் நூற்றாண்டில் வெட்டிக் கொல்லப்பட்ட 600 பக்தர்கள்) சடலங்கள் இந்த மண்ணிலேயே புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அன்றைய காலத்தில வேத சாட்சிகளின் ஞாபகார்த்தமாக ஆலயம் அமைப்பதற்காக கிடங்கு தோண்டப்பட்டபோது குறித்த இடத்திலிருந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இவை வேத் சாட்சிகளின் எலும்புக் கூடுகள் என முன்னோர் கூறியதனைத் தொடர்ந்து அவை ஒன்று சேர்க்கப்பட்டு கல்லறை அமைக்கப்பட்டு தற்போது வழிபாடு செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே குறித்த ஆலயத்திற்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை தியான மண்டபம் அமைக்க பள்ளம் தோண்டிய போது எலும்புக் கூடுகள் சில மீட்கப்பட்டுள்ளன. குறித்த எலும்புக் கூடுகளை பெரும்திரளான மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# 24 இலங்கை தமிழர்...

காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

சோனான்குப்பம் கிராமத்தின் கரையோரப் பகுதிகளில் அதிகாலை வேளையில் சந்தேகத்திற்கு இடமாக காத்திருந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கிராம மக்கள் காவல் துறையினருக்கு அறிவித்துள்ளனர்.


படகு மூலம் பயணம் செய்வதற்கான ஏழு இலட்சம் ரூபாய் இந்தியப் பணம் செலுத்தப்பட் டுள்ளதாக விசர்ரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த நபர்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்த முகவர்களுக்கு எதிராக தமிழக கியூ பொலிஸார்வழக்குத்தாக்கல்செய்துள்ளனர்.

தமிழக கரையோரப் பகுதிகளைப் பயன்படுத்தி கடந்த சில மாதங்களாக இலங்கைத் தமிழர்கள் வேறு நாடுகளுக்கு செல்வதற்கு முயற்சி மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

# அரசியல் தீர்வை முன்வைக்காவிட்டால் போர் வெற்றியை தக்க வைக்க முடியாது

## கேணல் ஹரிகரன் அட்வைஸ்



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நீதியானதும், நிலைத்து நிற்கக் கூடியதுமான அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்காவிட்டால் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அது பெற்ற வெற்றியை தக்கவைத்துக்கொள்ள முடியாது என இந்திய அமைதி காக்கும் படையின் புலனாய்வுத் துறையின் தலைவராகப் பணியாற்றிய ஓய்வுபெற்ற கேணல் ஹரிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து தென்னாசியாவின் ஆய்வாளர்கள் குழுவின் இணையத்தளத்தில் அவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில்,

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ் விவகாரம் குறித்து அவர் தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கை விவகாரம் குறித்து பிரித்தானியா, இந்தியா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாத வகையில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுதல், போரின்போது இடம்பெயர்ந்த மக்களின் முறையான மீள் குடியேற்றம் மற்றும் இலங்கைப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் இந் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

இலங்கையில் போர்க்குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்தவேண்டும் எனவும் தமிழர்கள் அனைவரும் சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகைசெய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கத்தின் மீது பொருளாதாரத் தடை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக சட்டப்பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதற்கான காத்திரமான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பது புதுடில்லிக்குத் தெரியும். இந்நிலையில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட இவ்விரு தீர்மானங்களும் கொழும்புக்கும், புதுடில்லிக்கும் கடுமையான அழுத்தங்களை ஏற்படுத்துபவையாகவே அமையும்.

இத்தகைய அழுத்தங்கள் புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான இராசதந்திர உறவுகளில் கயிறு இழுக்கும் நிலைகளையே உருவாக்கும்.

படைத்தரப்பு கடந்த மாத இறுதியில் விடுதலைப்புலிகளுடனான போர் வெற்றி குறித்த கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்காத வகையில் இப் போர் எதிர்கொள்ளப்பட்ட முறை குறித்து இக் கருத்தரங்கில் அதிகம் பேசப்பட்டது.

படைத்தரப்பின் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாத வரையில் கொழும்பு சற்று மூச்சுவிட முடியும்.

ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் அவசியம் என சர்வதேச ரீதியாக தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடருக்கு முன்னதாக இக் கோரிக்கை தொடர்பிலான புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் நடவடிக்கைகள் விரிவுபடும் என எதிர்பார்க்க முடியும்.

இந்நிலையில் இத்தகைய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையிலும், சர்வதேச சமூகத்தை நியாயமான வழிகளில் திருப்திப் படுத்தக்கூடிய வகையிலும் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறுவதோடு தேசிய நல்லிணக்கம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார். (எ-5)

# சிங்கள மக்...

புதுடில்லியில் பிரதமரைச் சந்தித்த அவர், இலங்கையின் போர்க்குற்றம் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக அரசின் கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றை முதல்வர் ஜெயலலிதா அளித்தார்.

அந்த ஆவணத்தில், இலங்கைப் போரின் கடைசி நேரத்தில் ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த மோதல் குறித்து ஊடகங்கள் சுதந்திரமாகச் செய்திகள் சேகரிக்கவும் அனுமதிக்கப் படவில்லை.

பரவலான குண்டு வீச்சுமூலம் பொதுமக்கள் படுகொலை, மருத்துவமனை மற்றும் நிவாரண முகாம்கள் மீது தாக்குதல், மனிதாபிமான உதவிகள் மறுப்பு, மனிதவுரிமைகள் மீறல், ஊடகம் மற்றும் அரசுக்கு எதிரான விமர்சகர்கள் மீது தாக்குதல் ஆகியவை குறித்து ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்தகைய போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை போர்க்குற்றவாளிகளாக அறிவிக்க, இப்பிரச்சினையை இந்திய அரசு, ஐ.நா. சபையிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிர்வாகத்தில் அவர்கள் முழுமையாக இடம்பெற வழி ஏற்படுத்த வேண்டும். இது குறித்து, நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில், தமிழர்கள் நீண்டகாலமாக இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். அரசியல் சட்டத்திருத்தம் மூலம் அவர்களுக்கு சமவுரிமை வழங்குவதை இலங்கை அரசு தவிர்த்து வருகிறது.

சிங்களவர்களுக்கு இணையாக தமிழர்களுக்கு அரசியல் ரீதியான சமவுரிமை வழங்க வேண்டும். முகாம்களில் உள்ள தமிழர்கள் முழுமையாக சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்தப்படும்வரை, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். இதற்கான முயற்சிகளை மற்ற நாடுகளுடன் இணைந்து இந்தியா எடுக்கவேண்டும் என்று பிரதமரிடம் ஜெயலலிதா அளித்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக நிறுத்துமாறு டெல்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தமிழக மக்கள் பெரிதும் ஆதரித்துள்ளனர்.

இந்நிலையில், தமிழக அரசுடன் கலந்தாலோசிக்காமல் மிகத் தவறான நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல் சேவையை உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். தமிழர்கள் பற்றிய விவரங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தெரிவிக்கும் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. எனவே இலங்கையில் தமிழர்களின் நிலையை அறிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அனுப்பவேண்டும் என இம்மனுவில் முதலமைச்சர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார். (எ-5)

# எத்தனை சிறைகளில் அடை...

தொழித்து நாட்டு மக்கள் மகிழ்ச்சிக் கோசம் எழுப்பும் வரையில் எமது பயணம் தொடரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த நீதிமன்ற தீர்ப்புத் தொடர்பான வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்ட போது அவர் இந்தக் கருத்துக்களை ஊடகவியலாளர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

யுத்த நீதிமன்றின் தீர்ப்பினை ஜனாதிபதி அங்கீகரித்துள்ளதனால் அதற்கு எதிரான தீர்ப்பு வழங்கக் கூடிய அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு கிடையாது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பிம்பா திலகரட்ண தெரிவித்துள்ளார். இவ்வாறு ஏற்கெனவே உச்ச நீதிமன்றினால் வழங்கப்பட்ட மூன்று முக்கிய தீர்ப்புக்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தால் முப்படைகளின் முன்னாள் பிரதானி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள சிறைத்தண்டனை குறித்து நீதிமன்றில் விசாரணை செய்ய முடியாது என சட்டமா அதிபர் சார்பில் மேன் முறையீட்டு நீதிமன்றில் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள 30 மாத கால சிறைத் தண்டனைக்கு எதிராக சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இரண்டாவது இராணுவ நீதிமன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பை நாட்டின் தலைவர் மற்றும் முப்படைகளின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி அங்கீகரித்துள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் கருத்துத் தெரிவித்த அரச பிரதி வழக்கறிஞர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் அரசியல் யாப்பு ஏற்பாடுகளுக்கு அமைய இரண்டாவது இராணுவநீதிமன்றின் தீர்ப்பை நீதிமன்றில் விசாரணை செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த தீர்ப்பிலிருந்து நிவாரணம் பெறவேண்டுமாயின் மனுவை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என அரச பிரதி வழக்கறிஞர் கூறியுள்ளார்.

இதன்படி குறித்த வழக்கின் மீதான விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ-1)

# முன்னாள் போரா...

கூறப்படும் கே.பி எனப்படும் முன்னாள் விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனையும் இந்தக் குழு விசாரணை செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆயுதக் கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற அடிப்படையில் அவரை இந்தக் குழு சந்திக்கவுள்ளதாக குழுவின் பேச்சாளர் ஜெகோ பீரெண்ட் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதி மற்றும் ஆயுத பரம்பல் தொடர்பில் நெதர்லாந்து ஆரம்பித்துள்ள விசேட விசாரணை நடவடிக்கையின் கீழ் இந்தக் குழு செயற்படுவதாக நெதர்லாந்தின் வானொலி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏற்கெனவே இந்தக் குழு நெதர்லாந்தில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 90 பேரிடம் வாக்கு மூலங்களை பதிவுசெய்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் பல்வேறு தன்னார்வக் குழுக்களிடமிருந்தும் தமக்குச் சொந்தமான கப்பல் நிறுவனங்களிடமிருந்தும் தமது போராட்டத்திற்கான நிதியினை சேகரித்ததாக இந்தக் குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

# இந்தியாவுடன் முரண்பட...

தீர்த்துக்கொள்ள வேண்டும். ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாக வெளியிட்டு வந்த குற்றச்சாட்டுக்கள் ஆபத்தான வகையில் அமைந்துள்ளன.

கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர் மூளையைப் பயன்படுத்த வேண்டும் என ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கண்மூடித்தனமான கருத்துக்களை வெளியிட்டால் அதன் மூலம் நாட்டு மக்களே பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் எவற்றுக்கு இணங்கியது. எவற்றை நிராகரித்தது என்பது தொடர்பில் தமக்கும் கட்சிக்கும் சந்தேகம் நிலவி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

# வட. கிழ...

அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வினை அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ள அரசாங்கம், அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறும் என மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-5)

அரச, தனியார் அலுவலர்கள், பட்டதாரிகள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான

**English Workshop (ஆங்கில பயிற்சிபட்டறை)**

அமைப்புக்கள், பிரயோகங்கள், இணைப்புச்சொற்கள், "என்று" அமைப்புக்கள், பிறர்கூற்று மற்றும் செயற்பாட்டு வசனங்கள், Cauative வசனங்கள் உட்பட ஆங்கிலம் கதைத்தலுக்கு தேவையான அனைத்து விடயங்களும் கற்பிக்கப்படும்

காலம் : 15.06.2011 புதன்கிழமை
பிரிவுகள் : 8-10, 10-12, 2-4, 4-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

அனுமதி இலவசம்

கலந்துகொள்வோருக்கு புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்

MyWay English

182, Stanley Rd, Jaffna.
Ph : 0773363456

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.